Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!
மகாராசி சில்க்ஸ்
சல்வார் கிற
இந்தியன் சாறி வகைகள்
மற்றும் சிறுவர், சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 15 (10.12.2003) புதன்கிழமை இதழ் :71

# தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து தமிழ்ச்செல்வனுடன் கூட்டமைப்பினர் பேச்சு!

## ஒன்றிணைந்து செயற்படவும் தீர்மானம்

(கிளிநொச்சி)

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக்காலை தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் நேற்றுக்காலை 11.30 மணியளவில் ஆரம்பமான இந்தச் சந்திப்பு சுமார் இரண்டு மணிநேரம் நீடித்தது.**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் - சம்பந்தன், அ.விநாயகமூர்த்தி மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் உள்ளிட்ட பதின்மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ்: சுரேஷ் அணி செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் ஆனந்தசங்கரி மற்றும் தங்கவடிவேல் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகள் சார்பில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ. தங்கனும் கலந்துகொண்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி - பிரதமர் இன்று சந்திப்பு!

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரத்திற்கும் நாடாளுமன்ற ஆட்சி அதிகாரத்திற்கும் இடையேயான பிரச்சினைகளைத் தீர்த்து, நடைமுறை அரசியலில் உள்ள பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையேயான பேச்சுவார்த்தையொன்று இன்று நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுக்களின்போது ஜனாதிபதியும் பிரதமரும் தீர்க்கமான ஒரு முடிவினை எடுப்பார்கள் என அரச தரப்பினர் தெரிவித்தனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கடலில் மூழ்கிய இளைஞனைக் காணவில்லை!

(மன்னார்)

திருமண நிகழ்வில் கலந்துகொள்ள, காலியிலிருந்து மன்னார் - பேசாலைக்கு வந்த இளைஞர் ஒருவர் கடலுக்குச் சென்றபோது கடந்த திங்கட்கிழமை காணாமற்போயுள்ளார்.

காலியை சொந்த இடமாகக் கொண்ட எஸ்.ரவி (வயது 21) என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, காலியிலிருந்து வந்த இளைஞர் குழுவினர், பேசாலைக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பலைப் பார்வையிடச் சென்றுள்ளனர்.

இவ்வாறு சென்ற இளைஞர்களில் சிலர், மூழ்கடிக்கப்பட்ட கப்பலின் மேற்புறத்தில் ஏறி நின்றவேளை, மூன்று இளைஞர்கள் தவறி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னிலங்கை அதிகார இழுபறி குறித்து கூட்டமைப்பு எம்.பிக்களுடன் பேசினோம்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இன்று நடைபெற்ற சந்திப்பில், தற்போதைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமாகவும், தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் அதிகார இழுபறிநிலை சம்பந்தமாகவும், தமிழர் தரப்பு முனனெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் நாங்கள் கலந்துரையாடியிருக்கிறோம். இந்தச் சந்திப்பு அந்த நோக்கத்தில்தான் அமைந்தது.

என நேற்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(10 ஆம் பக்கம் பார்க்க)




# படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பஸ் நடத்துநர் ஒருவர் படுகாயம்!

## நேற்று மாலை யாழ்.நகரப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தனியார் பஸ்சேவை நடத்துநர் ஒருவர் படுகாயமடைந்தார்.நேற்று மாலை யாழ். பஸ்நிலையப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூளாயைச்சேர்ந்த திருநாவுக்கரசு துரைச்செல்வன் (அப்பன் வயது-26) என்பவரே படுகாயமடைந்தவராவர்.

யாழ். பஸ்நிலையப பகுதியில் இளைஞன் ஒருவன் பத்திரிகை விற்றுக் கொண்டிருந்தார். அதனை படையினர் மூவர் தடுக்க முயன்றுள்ளனர். இதற்கு அந்த இளைஞர் ஆட்சேபம் தெரிவித்தபோது அவரிடமிருந்த பத்திரிகைகளை பறித்தெறிந்த படையினர் பத்திரிகை முகப்பில் இருந்த தலைவர் பிரபாகரனின் படத்தையும் கசக்கியெறிந்தனர்.

அந்த இளைஞரை இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டபோது அவர் தப்பியோடியுள்ளார். இந்த துப்பாக்கிச்சன்னம் பஸ் நிலையத்தில் நின்ற நடத்துநர் மீது பாய்ந்ததில் அவர் படுகாயமடைந்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோர்ஜ் பெர்னாண்டசுடன் பலகல்ல நேற்றுப் பேச்சு!

(புதுடெல்கி)

இந்தியாவுக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இராணுவத் தளபதியும், கூட்டுப்படைத்தளபதியுமான லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல நேற்று இந்தியப் பாதுகாப்புதுறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டசைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்புக்குறித்து இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பத்திரிகை விற்றுக்கொண்டிருந்தபோது படையினர் அச்சுறுத்தி சுட முயன்றனர்!

## காயமுற்ற விற்பனையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"யாழ். பஸ் நிலையத்தில் பத்திரிகை விற்பனை செய்துகொண்டிருந்த வேளை என்னை நோக்கி வந்த மூன்று படையினர் அச்சுறுத்திச் சுட முற்பட்டனர்."

இவ்வாறு நேற்று யாழ்.பஸ் நிலையப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக காயமடைந்த பத்திரிகை விற்பனையாளரான செ.விஜயகுமார் தெரிவித்தார்.

அவர் நேற்று நடைபெற்ற சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது,

யாழ். பஸ் நிலையத்தில் பெண் ஒருவருக்கு பத்திரிகை விற்பனை செய்துகொண்டிருந்த சமயம் என்னை நோக்கி வந்த மூன்று படையினர், துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி சுட முற்பட்டபோது நான் கையினால் அவர்களின் துப்பாக்கியை தட்டினேன். இதன்போது எனது ்கையில் காயம் ஏற்பட்டது. பின்னர் அவ்விடத்தினைவிட்டு தப்பி ஓடி நல்லூர்க் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் தஞ்சம் புகுந்தேன். என் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது தப்பியோட முற்பட்ட வேளை எனக்குப் பின்பாக நின்ற பஸ் உதவியாளர் ஒருவர் காயமடைந்ததை நான் கண்டேன்.

பின்பு நல்லூர்க் கோட்டப் பொறுப்பாளரிடம் இந்தச் சம்பவம் தொடர்பாக முறையிட்டிருந்தேன். அவர் போர்நிறுத்த கண்காணிப்பு யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொண்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கந்தர் மடம் பகுதியில் வீதி மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இன்று வீதி மறியல் போராட்டம் ஒன்று - பழம்றோட், கந்தர்மடங் பகுதியில் நடத்துவதற்கு ஞானசோதி சனசமூக நிலையத்தினர் தீர்மானித்துள்ளனர்.

நேற்றைய தினம் யாழ்.பஸ் நிலையத்தில் நடைபெற்ற அப்பாவிப் பொதுமகன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினைக் கண்டிக்கும் முகமாக காலை முதல் மாலை வரை ஞானசோதி சனசமூக நிலையத்திற்கு முன்னால் இந்த மறியல் போராட்டம் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக நிலையத்தின் தலைவர் து.கனகசிங்கம் தெரிவித்தார்.

நிறஞ்சனாஸ் சங்கானை
அஜித் மீராஜஸ்மின் நடித்த
ஆஞ்சநேயா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
GET GARTER
(சி-1846)

ராஜா யாழ்ப்பாணம்.
தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)

# நிவாரண விநியோகத்தை மேற்கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்

## திட்டப்பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை வேண்டுகோள்

இருபது நாட்களில் எட்டு வாரங்களுக்கான நிவாரணம் விநியோகிக்கப்பட வேண்டியுள்ளதால், நிவாரணம் பெறுவோரும், ப.நோ.கூ சங்கங்களும் போதிய ஒத்துழைப்பினை வழங்குமாறு, யாழ்.செயலகத்தில் இயங்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு பணியகத்தின், திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இந்த ஆண்டு முடிவதற்கு முன்னர், சகல நிவாரண வேலைகளும் பூர்த்தியாக்கப்படவேண்டியுள்ளதால், 8 வாரங்களுக்குரிய நிவாரணங்களை இன்னும் இருபது நாட்களுக்குள் வழங்கவேண்டியுள்ளது.

நிவாரணங்களை வழங்கும் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் நிவாரணம் பெறும் பொதுமக்களும் உரியகாலப் பகுதிக்குள் அவற்றைப்பெற்று ஒத்துழைத்தல் வேண்டும்.

நிவாரணங்கள் விரைவாகவும் சரியானமுறையிலும் விநியோகிக்கப்படல் அவசியம். இதனைச் சங்கங்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்தல்வேண்டும். அதேவேளை, கிடைக்கப்பெறும் உணவுப் பொருட்களை பொதுமக்கள் விற்பனை செய்வதில், ஈடுபடுவதும் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

இந்த துரித நிவாரண சேவைக்கு எம்மால் இயன்றளவு இலகுபடுத்தப்பட்ட விரைவான பணிகளை மேற்கொண்டுவருகின்றோம்.

நிவாரணம் பெறுவோர் உரிய காலப்பகுதிக்குள் நிவாரணத்தினைப் பெறுவதற்கு, தொண்டு மனப்பான்மை கொண்டோர் அறிவுறுத்துவது உதவியாக அமையும் எனவும், அவர் தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார். (ப)

## சிறுவிளம்பரம்

கைதடிக்கும் சரசாலைக்கும் இடையில் கைத்தொலைபேசி (NOKIA)கடந்த திங்கட்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அல்லது தொ.பே.இல 024-2220682 உடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (549)

X'MAS & NEW YEAR SALE
நத்தார், புதுவருட மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மார்கழி 1ஆம் திகதியிலிருந்து மார்கழி 31 ஆம் திகதி வரை சகல பொருட்களுக்கும் விசேட கழிவுடன் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

லைடன் புடவை நிலையம்
(பஸ் நிலையம் எதிர்)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2222381
சகல பொருட்களுக்கும் விசேட கழிவுண்டு
(சி/1841)

Yogi Home Science Academy
வழங்கும்
பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 2 நாட்கள் மட்டும்

01. நான்கு கேக் கலவைகள் 13.12.2003
காலை 10 மணி முதல் 2 மணி வரை
1.Rich Cake
2.Dates Cake
3.Light fruit Cake
4.Marble Cake

02. ஐந்து Pudding வகைகள் 13.12.2003 3 P.m முதல் 5 P.m வரை
1.Caramal Pudding
2.Cake Pineapple Pudding
3.Ribbon Pudding
4.Biscuit Pudding
5.Chocolate Icecream

03. ஐந்து வகை Short Eats வகைகள் 14.12.2003 காலை 10.30 மணி முதல் 1 மணி வரை பின் 2 P.m - 4 P.m வரை
1.Pizza
2.Nippon Rolls
3.Samosa
4.Date Surprise
5.Puff Short Eats

சேரவிரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்
75,அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
T.Phone: 222 - 2796
(547)

## பாராட்டும் நல்வாழ்த்தும்



பிரபல வர்த்தகரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் பிரிவு நிரந்தர உறுப்பினரும், சமூக சேவையாளரும், கோப்பாய் வட்ட லயன்ஸ் கழக உறுப்பினருமான

**திரு.சபாபதி -இரத்தினசிங்கம்**
(சபா பல்பொருள் வாணிபம்-அச்சுவேலி)

அவர்கள் 52வது அகவை காணும் இன்றைய நாளில் (10.12. 2003) யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்வதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்.
K.தவம், K.குலம். அச்சுவேலி.
(548)

# உனது நினைவுகளுடன்...



1988.12.10 அன்று கந்தர்மடம் பகுதியில் இந்திய இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவடைந்தார்.

உனது நினைவுகள் சுமந்து...
உன் பணி தொடர்வோம்...

வீர ஜனனம்: 1960.12.28
வீர மரணம்: 1988.12.10

## லெப். கேணல். மதி
## சுப்பிரமணியம் பாலச்சந்திரன்

வலி.வடக்கு மக்கள்.

(சி-1877)

### அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண

# தேசிய பாதுகாப்பு அமைச்சை உருவாக்க ஜனாதிபதி முயற்சி!



பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப பேற்றுள்ளதால் தோன்றியுள்ள சிக்கல்களுக் குத் தீர்வுகாணும் வகையில், தேசிய பாதுகாப் புத்துறை அமைச்சு என்ற பெயரில் - புதிய அமைச்சொன்றை உருவாக்குவதற்கு ஜனாதி பதி ஆலோசித்துவருவதாக செய்திகள் தெரி விக்கின்றன.

அத்தகைய அமைச்சொன்றை புதிதாக அமைத்து, அதனை ஐக்கிய தேசிய முன் னணி அரசாங்கத்திடம் கையளிக்கவும் ஜனா திபதி உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்ட அனைத்துத் திணைக்களங்களையும் மற்றும் உள்துறை அமைச்சின் கீழுள்ள சில திணைக் களங்களையும் இந்தத் தேசிய பாதுகாப்புத் துறை அமைச்சின்கீழ் கொண்டுவந்து, அதனை அரசாங்கத்திடம் கையளிப்பதன்மூலம் தற்போ தைய சர்ச்சைக்குத் தீர்வுகாண - ஜனாதிபதி உத்தேசித்துள்ளதாக தெரியவருகிது.

எனினும், பாதுகாப்பு அமைச்சின் முக்கிய சில பொறுப்புக்களை ஜனாதிபதி தொடர்ந்தும் தன்னுடைய அதிகாரத்தின்கீழ் வைத்திருக் கவே விரும்புகின்றார் என்று தெரிவிக்கப்படு கிறது.

## தேசிய நீர்வடிகாலமைப்பு ஊழியர்கள் நாளைமுதல் வேலைநிறுத்தம்!

தனியார் மயமாக்கலை எதிர்த்தும், சம்பள உயர்வை வழங்கக்கோரியும் - தேசிய நீர்வடி காலமைப்புச் சபை ஊழியர்கள் எதிர்வரும் நாளைமுதல் அரசாங்கத்திற்கெதிராக போராட் டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தம்மால் முன்னர் அரசாங்கத்திற்கு இது தொடர்பாக கோரிக்கைகளை முன்வைத்த போதும், அது தொடர்பாக சாதகமான பதில் எதனையும் அரசு இதுவரை வழங்காததை ஆட்சேபித்தே இந்தப் போராட்டம் இடம்பெற வுள்ளதாக, நீர்வடிகாலமைப்புச் சபை ஊழியர் கள் தெரிவித்தனர்.

அத்துடன் எதிர்வரும் 17 ஆம் திகதி - வடிகாலமைப்புச் சபை ஊழியர்கள் தமது பணிகளை இடைநிறுத்தி, முழுமையான போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இதனால், நாட்டின் பல இடங்களிலும் நீர்விநியோகத் தடை ஏற்படவாய்ப்பிருப்பதாக அஞ்சப்படு கிறது. (01)

# தேசிய அரசு அமைக்கும் முயற்சிக்கு சுதந்திரக்கட்சியினர் சிலரும் எதிர்ப்பு!

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்கும் ஜனாதிபதி யின் யோசனைக்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சில கடும்போக்காளர்கள் எதிர்ப் புத் தெரிவித்துவருவதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக, ஐக்கிய தேசியக் கட்சி யுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் ஜனாதிப தியின் முயற்சி எவ்வளவு வெற்றிபெறும் என் பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

இதேநேரம், சுதந்திரக் கட்சியிலுள்ள சிலர், ஜே.வி.பி.யுடன் சுதந்திரக் கட்சி கூட்டமைக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருப்பதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்து டன் ஒரு இணக்கப்பாடு எட்டும் முயற்சிகள்- தற்போது ஆமை வேகத்தில் நடந்துவரும் நிலையில், இரண்டு தரப்புக்களுமே தேர்தல் ஒன்று பற்றியே அதிகமாகச் சிந்திப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தேர்தல் ஒன்று இடம்பெறக் கூடிய வாய்ப்புக்களே அதிகம் இருப்பதாகக் கணித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, மாவட் டம்தோறும் வேட்பாளர்களைத் தெரிவுசெய் யும் பணியையும் நிறைவுசெய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, மாவட்டந்தோறும் விஜயங் களை மேற்கொண்டுவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்குள்ள மக்களை சந்திந் தித்துக் கலந்துரையாடுவதெல்லாம் தேர்தலை இலக்காகவைத்து மேற்கொள்ளப்படும் காய் நகர்த்தலே என்று அவதானிகள் கூறுகின்றனர்.

## மேல்கொத்மலை நீர்தேக்கத் திட்டத்தை எதிர்த்து இன்று ஆர்ப்பாட்டம்!

மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை எதிர்த்து இன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆர்ப்பாட்டமொன்றினை நடத்தவுள்ளன.

ஜப்பானிய நிதி நிறுவனம் ஒன்றின் ஆதர வுடன் மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எரி பொருள், மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூ ரிய இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

இந்தத் திட்டத்தை எதிர்த்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட மலையகத் தொழிற்சங்கங்களின் ஆதரவுடன், அரச சார் பற்ற நிறுவனங்கள் நடத்துவதற்கு திட்டமிட் டுள்ளனர்.

இதேவேளை, மலையக மக்கள் முன்ன ணியின் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவை வழங்கவில்லை என, அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார். மனிதஉரிமைகள் தினமான இன்று நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொள்வார் கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெருந்தோட்டத்துறையிடம் - காணி உரிமை இன்னமும் வழங்கப்படாமையைக் கண்டித்தும், லயன் முறையிலான மாடிமு றையை எதிர்த்தும், கட்டாயக் கருத்தடை முறையை எதிர்த்தும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளன.

சரசி மாமன்றம் இந்தப் போராட்டத்திற் கான ஏற்பாடுகளைச் செய்துவருவதாக, அந்த அமைப்பின் இணைப்பாளர் கீதபொன்கலன் தெரிவித்தார். (01)

### பொதுத் தேர்தல் நடைபெறுமானால்

# வடக்கு, கிழக்கு, மலையக தமிழ்க்கட்சிகள் ஓரணியாகப் போட்டியிடுவதற்கு முயற்சி!

பொதுத் தேர்தல் ஒன்று நடாத்தப்படு மானால், அதில் வடக்கு - கிழக்கு, மலையகப பகுதிகளைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகள் அனைத தும் இணைந்து ஓரணியாகப் போட்டியிடுவ தற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு வதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையி லான இணக்கப்பாட்டு முயற்சிகள் எதிர்பார்த்த ளவு வெற்றிகளைத் தராதநிலையில், பொதுத் தேர்தல் ஒன்று நடாத்தப்படுவதற்கான வாய்ப் புக்கள் அதிகரித்துள்ளது.

இந்த நிலையிலேயே, இவ்வாறான முயற் சியில் வடக்கு - கிழக்கு மற்றும் மலைய கத்திலுள்ள அனைத்துத் தமிழ் கட்சிகளும் இறங்கியுள்ளதாக தெரியவருகிறது.

தேர்தல் ஒன்று நடந்தால், அதில் விடுத லைப் புலிகளுடைய ஆதரவுபெற்ற தமிழ்க் கட்சி மூன்றாவது சக்தியாக உருவெடுக்கும் வாய்ப்புக்கள் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதால், தமிழ் மக்க ளுக்கு மேலும் சாதகமான நிலைமை தோன் றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்பலத்துடன் தமிழ்க் கட்சிகள் வெற்றிபெறுமானால், அரசமைப்பதில் தமிழ்க் கட்சிகள் பெரும் செல்வாக்குச் செலுத்துவ தோடு, இது தமிழ் மக்களுடைய பேரம்பேசும் சக்தியை இன்னும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே தற்போது வடக்கு - கிழக்கிலுள்ள கட்சிகளும், மலையகக் கட்சிகளும் ஒரே அணியாகப் போட்டியிடுவது பற்றி சிந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டணி; நேற்றைய பேச்சிலும் முடிவில்லை!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைப்பது தொடர்பான இணக்கத் துக்கு வருவதற்காக நடைபெற்ற கூட்டம் இறுதித்தீர்மானம் எதுவும் எட்டப்படாத நிலையில் ஒத்திவைக் கப்பட்டது.

நேற்றைய தினம் ஜனாதிபதி மாளிகையில் கூட்டணி அமைப்பது தொடர்பான இணக்கத்துக்கு வருவ தற்கான கூட்டம் ஒன்று நடைபெற் றது. இதில் சுதந்திரக்கட்சியின் சார்பில் ஜனாதிபதியும். மைத்திரி பால சேனநாயக்க, ஜே.வி.பியின் சாா பில் விமல் வீரவன்ச, ரில்வின் சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பலவிடயங்கள் ஆரா யப்பட்டபோதும் இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை. மிக விரைவில் அரசியல் நகர்வுகளை அவதானித்து - இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச அழுத்தத்தின் மத்தியி லும் ஜே.வி.பியுடன் ஓர் இணக்கத் துக்குவருவது தேர்தலில் முகம் கொடுபபதற்கேயாகும் எனத் தெரி விக்கப்படுகிறது.

ஏற்பட்டுள்ள அரசியல் நெருக் கடிக்குத் தீர்வுகாண 15 ஆம் திகதி ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடை யில் நடைபெறவுள்ள சந்திப்பின் பின்னர், சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி. பிக்கும் இடையில் கூட்டணி அமைப் பது தொடர்பான ஒப்பந்தம் கைச் சாத்திடப்படலாம் என, கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (01)

# திருமலையில் அசம்பாவிதங்களை தடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும்!

## பொலிஸ் அத்தியட்சகர் வேண்டுகோள்

திருகோணமலை நகரில் அசம் பாவிதங்கள் திடீரென்று உருவாகு வதாகவும், இவ்வாறான அசம்பாவி தங்களைத் தடுத்துநிறுத்துவதற்குப் பொலிஸாருக்கு அனைத்துத் தரப் பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும் என்று, திருகோண மலை பொலிஸ் அத்தியட்சகர் தயா சமரவீர கோரிக்கைவிடுத்துள்ளார்.

திருகோணமலையில் அமைதி யும், சமாதானத்தையும் தொடர்ந்து நிலைநிறுத்தும் வகையில் விசேட கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி யில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பொலிஸார், சமாதானக்குழுப் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள் மற்றும் பொதுமக் களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அங்கு தயா சமரவீர மேலும் தெரிவிக்கையில்,

மக்களுடைய பூரண ஒத்துழைப் பும், ஏனையவர்களுடைய ஆதரவும் கிடைக்கும்போதுதான் - பொலிஸா ரால் சட்டத்தையும், ஒழுங்கையும் முழுமையாக நிலைநிறுத்தமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

## ரயிலுடன் மோதுண்டு சிறுவன் பலி!

பாதுகாப்பற்ற ரயில் கடவை யை கடக்க முயன்ற முச்சக்கர வண்டியைச் செலுத்திவந்த 15 வய துச் சிறுவன் ரயிலுடன் மோதுண்டு பரிதாபகரமாக உயிரிழந்தான். இந் தச் சம்பவம் புத்தளம் மதுரங்குளிப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது, ஆட்டோவில் சென்ற மற்றுமொருவர் படுகாயம டைந்தார். (01)

### உயர் பாதுகாப்பு வலயங்களில்

# மக்களை மீளக்குடியமர்த்துவதே அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை!

## காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன



உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியேற்றுவதே அர சின் அடுத்த நடவடிக்கையாக இருக கும் என, காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த கால இராணுவ நடவடிக் கைகளினாலும் மற்றும் படையின ரின் முகாம்களின் விஸ்தரிப்பு போன்ற காரணங்களினாலும் - பெரு மளவு பொதுமக்கள் தமது இருப்பி டங்களை உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசகளினால் இழந்துள்ளார்கள்

அவர்கள் அகதிமுகாம்களில் முடங்கிக்கிடந்து, அவலவாழ்வு வாழ்கிறார்கள். அந்த மக்கள் புலி கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்க ளல்ல. அவர்கள் சாதாரண பொது மக்களே. மனிதாபிமானரீதியில் அவர்களைத் தமது இருப்பிடங்க ளில் மீளக்குடியமர்த்தப்படுவது இன் றியமையாதது.

அதைவிட இன்றைய அரசு, வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ்மக்களுடைய ஆதரவை யும், ஒத்துழைப்பையும்பெறவேண்டு மாக இருந்தால் இடம்பெயர்ந்துள்ள மக்களை அவர்களது பகுதிகளிலே குடியமர்த்தவேண்டும்.

விடுதலைப்புலிகளுடன் நடை பெற்றுமுடிந்த பலசுற்று பேச்சுக்க ளின் போதும் உயர்பாதுகாப்பு வல யங்கள் பற்றியே முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயங்களில் இருந்த மக்களின் பெறுமதிவாய்ந்த பல வீடுகள், ஆலயங்கள் பாடசா லைகள் என்பன அழிக்கப்பட்டன.

சிங்கள மக்களின் நலனில் அக் கறை கொள்ளும்போது, தமிழ்மக்க ளுடைய நலன்களையும் கவனத் தில்கொள்ளவேண்டும். இனியும் இவ் வாறானதொருநிலையை உருவாக் காமல், தமிழ்மக்களின் நலன்க ளுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படவேண்டும்.

இடம்பெயர்ந்துள்ள மீனவர்கள் உட்பட அனைத்துப் பொதுமக்க ளும் - அவர்களது இருப்பிடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு, அவர்க ளுக்குரிய தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும்

அதிஉயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றுவது - நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறிக்கொண்டி ருக்காமல், அந்த விடயத்தில் நெகிழ வுப்போக்கை அரசு கடைப்பிடிக்கும் என்றும் அமைச்சர் ராஜித மேலும் தெரிவித்தார்.

இம்மாதம் 21 ஆம், 22ஆம், 23 ஆம் திகதிகளில் திருகோணமலை யில் நடைபெறவுள்ள காணிவிடயங் கள் தொடர்பான நடமாடும் சேவை யில் கலந்துகொள்ளவுள்ள அமைச் சர் ராஜித, விடுதலைப்புலிகள் கட் டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நடை பெறவுள்ள இலவச மருத்துவசேவை முகாமிலும் கலந்துகொள்ளவுள்ள தாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# பாண்டிச்சேரி நிர்வாக முறைப்படி முஸ்லிம் மக்களுக்கு தனியலகு!

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

நிலத்தொடர்பற்ற வெவ்வேறு பிரதேசங்களை ஒன்றிணைத்து தனி யான அரசியல் அதிகார அலகை ஏற்படுத்துவதில் இந்தியாவின் பாண் டிச்சேரி மாநிலத்தின் நிர்வாக முறையை முன்னுதாரணமாகக் கொள்ளலாம் என்று, ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச் சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித் துள்ளார்.

பாண்டிச்சேரி முன்னாள் மாநில முதலமைச்சருடன் புதுடில்லியில் அண்மையில் சந்தித்துப்பேசியபோதே ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித் ததாக துறைமுக அபிவிருத்தி, கப் பற்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

பாண்டிச்சேரி போன்ற நிர்வாக முறை இலங்கையின் இனப்பிரச்சி னையை மையமாகவைத்து நோக் கும் போது, இன்று வடக்கு - கிழக் கில் வாழும் முஸ்லிம் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களையும், அபிலாஷைகளையும் ஓரளவுக்கு நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் என்று ஹக்கீம் அங்கு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் நிலத்தொடர் பற்ற வெவ்வேறு பிரதேசங்களில் நிர்வாகம் செய்வது குறித்தும் கலந் துரையாடப்பட்டதாக அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# எம்மிடம் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மையால் புற்றுநோய் சிகிச்சைநிலையத்தை இழந்தோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(வடமராட்சி)

எங்களிடையேயுள்ள ஒற்றுமையீனம் காரணமாக, இன்று யாழ்.குடாநாடு ஒருபுற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைவதை இழந்துள்ளது.

இவ்வாறு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட அதிநவீன சிறுவர் விடுதி திறப்புவிழாவிலும், 16 ஆவது இலவச கண்ணாடி வழங்கும் வைபத்திலும் கலந்துகொண்டு உரையாற்றுகையில் - யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபைத் தலைவர் - வைத்தியகலாநிதி க.மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், எம்.கே.சிவாஜிலிங்கம் தொடர்ந்து கூறியதாவது-

வல்வெட்டித்துறையில் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்கு யு.என்.எச்.சி.ஆர் 40 கோடி ரூபாவையும், விடுதலைப்புலிகள் ஒருகோடி ரூபாவையும் தரமுன்வந்தனர். ஆனால் எங்களிடையே உள்ள வேற்றுமை காரணமாக அது நிறைவேறாமல் போய்விட்டது. புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை நிறுவுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடையாக இருக்கிறார்கள். ஆனால் காசநோய் ஆஸ்பத்திரியை அமைப்பதற்கு எல்லா இடமும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இன்று அது வல்வெட்டித்துறையில் இயங்கிவருகிறது.

புற்றுநோய் நிலையத்தை அமைப்பதற்கு ஆதங்கம் பேசுவோர் காசநோய் நிலையத்தை புறம்தள்ளிவிட்டு விட்டார்கள். சுகாதார அமைச்சு அனுமதித்தபோதிலும், இன்று யாழ்.குடாநாடு ஒரு புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை இழந்துள்ளது. புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்கு அமைக்கப்பட்ட அமைப்புக் கூட இயங்காமல் விட்டுவிட்டது.

நான் சுகாதார அமைச்சரை நேரடியாகச் சந்தித்தபோது, தற்போது ஆதாரவைத்தியசாலையாக இருக்கும் பருத்தித்துறை (மந்திகை) ஆதாரவைத்தியசாலை பொது வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படுமெனவும் - சாவகச்சேரி, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைகள் ஆதாரவைத்தியசாலைகளாக தரம் உயர்த்தப்படுமெனவும் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை தரம் உயர்த்தப்படமாட்டாது எனவும் உறுதியளித்துள்ளார் எனவும் கூறினார்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் க.மயிலேறும் பெருமாளை இந்த வைத்தியசாலையிலிருந்து இடம்மாற்ற அனுமதிக்கமாட்டோம் எனவும் உயர் பதவி கிடைக்கும்பட்சத்தில் மாத்திரம் அனுமதிப்போம் எனவும் கூறினார்.

யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் பேசுகையில் கூறியதாவது -

20 வருடகால யுத்தம் முடிந்தபின், யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு யாழ். மாவட்டத்தில் சிறந்த தலைமைத்துவம் தொழில் சார்ந்த விற்பன்னர்களும் தேவை. ஆனால், வடகிழக்கில் பற்றாக்குறையாகவே இருந்து வருகின்றது. டாக்டர் மயிலேறும்பெருமாள் - துறைசார்ந்த அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்று, வைத்தியத்துறையை அபிவிருத்தி செய்துவருகின்றார். இது போற்றப்படவேண்டிய விடயமாகும். இதுபோன்று அதிகாரிகள் திணைக்களங்கள் பொது நிறுவனங்கள் இருந்தால் சிதைவுற்ற எமது யாழ். குடாநாட்டை, அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லமுடியும் என்றார். (17)

## வலி. கொத்தணியின் ஏற்பாட்டில் பனம்விதை நடுகைத் திட்டம்

(புன்னாலைக்கட்டுவன்)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணியின் ஏற்பாட்டில் ஐயாயிரம் பனம் விதைகள் நடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்லூண்டாய்வெளி, அராலிப் பிரதேசங்களில் இந்த பனம் விதைகள் இம்மாதம் நடுகை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த அனர்த்தங்களால் அழிவடைந்த பனை வளத்தை, மீளவும் உருவாக்கும் நோக்குடன், இந்தப் பனம் விதை நடுகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொத்தணித் தலைவர் மெய்யழகன் தெரிவித்தார். (83)

## அடைமழை காரணமாக வெங்காய பயிர்களில் நோய்த்தாக்கம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஈவினைப்பிரதேசங்களில் நடுகை செய்யப்பட்டிருந்த வெங்காயம் - தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழையால், அழுகல் நோய் ஏற்ப்பட்டுள்ளதாகவும் இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களைக் காட்டிலும் இவ்வருடம் கூடுதலான அளவு வெங்காயம் இந்தப்பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்தபோதும், பெரும்பாலான விவசாய நிலங்களில் செய்கை பண்ணப்பட்டிருந்த வெங்காயம் முழுமையாக அழுகல் அடைந்துள்ளதாகவும், சிலவற்றில் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதாக்வும் விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

மேலும், இங்கு அமைக்கப்பட்டிருந்த நாற்று மேடைகளிலும் அழுகல் நோய் ஏற்பட்டு நாற்றுக்கள் அழிவடைந்துள்ளதாகவும்,

அறுவடைக்குத் தயாராகவிருந்த கோவாப் பயிரில் ஏற்பட்டுள்ள இந்த நோயால் கோவாமுட்டைகளும் அழுகி வருவதாகவும் இதனால், விவசாயிகள் நட்டமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (83)

### கருத்தரங்கு

எயிட்ஸ் நோயைத் தடுப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று நெல்லியடி ப.நோ.கூ. சங்க தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடிப் ப.நோ.கூ. சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வினை, நெல்லியடி பொதுச் சுகாதாரப் பிரிவினர் ஒழுங்கு செய்துள்ளனர். இந்த நிகழ்வில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மற்றும் கூட்டுறவு ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். குடாநாடெங்கும் பரவலாக எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் விவரணப் படங்கள் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றமை தெரிந்ததே.

## யாழ்.போதனா வைத்தியசாலை நோயாளர்களின் நன்மைகருதி தொலைத்தொடர்பு வசதிகள்

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களின் நன்மை கருதி - தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை நிர்வாகத்தின் முன்கோரிக்கைக்கு இணங்கவே, இத்தப் புதிய தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும நோயாளர்கள் தமது உறவினர்களுக்கிடையேயான தகவல்களை உடனுக்குடன் பரிமாறப் பெரிதும் உதவியாக உள்ளதாக நிர்வாகம் தெரிவித்தது.

காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெறும் இந்த தொலைபேசிச் சேவை இனிவரும் காலங்களில் 24 மணிநேர சேவையாக நடத்தவேண்டும் எனவும், இதனால் நோயாளர்கள் மேலும் பயன் பெறமுடியும் எனவும் யாழ்.போதனா வைத்தியசாலை நோயாளர்சார்பில் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை தொலைபேசிக் கட்டணங்கள் வழமையான கட்டணங்களாகவே உள்ளதுடன், இதனால் அதிகளவில் நோயாளர்கள் பயன்பெற்று வருகின் றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (121)

### கடன் உதவி

ஈவினை கற்பகவிநாயகர் சனசமூக நிலையத்தினரால் லிட்ஸ் நிறுவன உதவியுடன், அப்பகுதி விவசாயிகளுக்கு பெரும்போகச் செய்கைக்கு சுழற்சிமுறைக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

பதினேழு விவசாயிகளுக்குத் தலா ஐயாயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாகவும், இவற்றை நான்கு மாதங்களின்பின் குறைந்த வீத வட்டியுடன் மீளளிக்க வேண்டுமெனவும், பயனாளிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (83)

## மணற்காட்டுப்பகுதியில் 3000 சவுக்குகள் நடப்பட்டுள்ளன

வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்கம் மணற்காடு - குடத்தனைப் பகுதிகளில் இந்த வருடம் 3000 சவுக்கங்கன்றுகளை நாட்டி வருகிறார்கள்.

சென்ற வருடம் 15000 கன்றுகளை மாத்திரம்நாட்டியுள்ளார்கள். இதைவிட இந்தவருடம் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசத்திற்கு 2000 சவுக்கங்கன்றுகளையும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கு 2000 சவுக்கங்கன்றுகளையும் விநியோகித்துள்ளார்கள்.

இதே நேரத்தில், விறகுக்காக சவுக்கு மரங்கள் தறிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## யுவானியார் விடுதியில் ஒலிபெருக்கி சாதனம் கொள்ளை

பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்திலுள்ள பிரதம பங்குத்தந்தையின் விடுதியில் இருந்து, 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிப்பெருக்கிச் சாதனங்கள் உட்பட பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது -

ஆலயப் பங்குத்தந்தை விடுதியில் இல்லாதவேளை, விடுதியினை உடைத்து உள்நுழைந்த திருடர்களே தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக பங்குத்தந்தையினால் இளவாலைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, இப் பகுதிகளில் அண்மைக் காலமாக பரவலாகத் திருடர்களது தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (71)

## மணற்காட்டிலுள்ள சவுக்கு மரங்கள் படையினரால் வெட்டப்படுகின்றன

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குடத்தனை, மணற்காடு பிரதேசங்களில் மீண்டும் சவுக்கு மரங்கள் படையினரால் வெட்டப்பட்டு வருவதாக, அப்பகுதி சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம் கவலை தெரிவித்துள்ளது. தொடர்ந்தும் படையினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டால் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும், அச்சங்கம் தெரிவித்தது.

மேற்படி பிரதேசத்தில் கடலரிப்பைத்தடுக்கவும், சூழல் மாசுபடுவதைத்தடுக்கவும் நடுகை செய்யப்பட்டு பேணப்பட்டு வரும் இந்தச் சவுக்கு மரங்களினை படையினர்தம் தேவைகளுக்கு வெட்டி வருவது இப் பகுதியின் சூழலைப்பாதிக்கும் செயல எனத் தெரிவித்த இந்தச் சங்கம் யாழ்ப்பாண அரச அதிபர், மருதங்கேணி பிரதேச செயலர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர். (122)

## விவசாய சம்மேளனத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா நிகழ்வு

கந்தரோடை விவசாய சம்மோளன களஞ்சியம் அமைப்பதற்காக கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் - பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, ஐந்து லட்சம் ரூபாய் நிதி - உடுவில் பிரதேச செயலர் கிருபாகரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா கந்தரோடையில் இடம்பெற்றது. இந்த அடிக்கல் நாட்டு வைப வத்துக்கு உடுவில் பிரதேச செயலர் கிருபாகரன் கந்தரோடை கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருநாவுக்கரசு, சமாதான நீதவான் மகாதேவா, சம்மேளனத்தலைவர் இலங்கைநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (42)

## நிகொட் உதவித்திட்டத்தின் கீழ் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளது

நிகொட் உதவித்திட்டத்தின்கீழ், பிரதேசசபைகளால் பத்து கிலோ மீற்றர வீதி புனரமைக்கப்படவுள்ளது. 2004 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து இந்த மீள்புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளன. ஒவ்வொரு பிரதேசசபை எல்லைக்கும் உட்பட்ட பத்து கிலோமீற்றர் வீதி, மீள்புனரமைப்புக்கென ஒவ்வொரு பிரதேசசபைக்கும் - 1 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிகொட் நிறுவன உதவித்திட்டத்தின் செயற்பாட்டிற்கான, பூர்வாங்கச் செயற்பாடுகள் முடிவடைந்துள்ளதாகவும், 2004 ஆம் ஆண்டு ஒவ்வொரு பிரதேசசபையும் மீள்புனரமைப்பு பணிகளில் ஈடுபடும் எனவும், வலி. தென்மேற்கு பிரதேசபையின் உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார். (91)

## நாவற்குழியிலுள்ள மதகில் குழி ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்திற்கு அபாயம்

ஏ-9 பிரதான வீதியில் நாவற்குழி உணவுக் களஞ்சியத்திற்கு சமீபமாக உள்ள மதகு ஒன்றில் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது. வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ள மேற்படி வீதியில் காணப்படும் இந்தப் பாரிய குழி - கற்கள், தகரங்கள் போடப்பட்டு தற்காலிகமாக செப்பனிடப்பட்டிருந்தாலும், கனரகவாகனங்களின் போக்குவரத்தால் இந்தக் குழி பெரிதாகி மதகு முற்றாக உடையும் அபாயம் ஏற்படும்.

இதனால், விபத்துக்களும் உயிராபத்தும் ஏற்பட வாய்ப்புண்டாகியுள்ளது. உரியவர்கள் இது விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (24)

## பெற்றோருக்குத் தெரியாமல் கொழும்பு செல்லமுயன்ற மூன்று சிறுவர்கள் வசமாக உறவினரிடம் சிக்கினர்

### இணுவில் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பெற்றோருக்குத் தெரியாமல் கொழும்பு செல்லமுயன்ற மூன்று சிறுவர்கள் உறவினர் ஒருவரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். இச் சம்பவம் இணுவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக தெரியவருவதாவது, பதின்மூன்று வயதுடைய பாடசாலைச் சிறுவர்கள் மூவர் பெற்றோருக்குத் தெரியாமல் கொழும்பிற்குச் செல்வதற்காக புறப்பட்டுள்ளனர் . இவர்கள் பஸ்ஸிற்காக காத்திருந்த போது, பயணப்பைகளுடன் இவர்களைக் கண்ட உறவினரொருவர் அவர்களிடம் விசாரித்துள்ளார்.

இதன்போது, இவர்கள் மூவரும் பெற்றோருக்குத் தெரியாமல் கொழும்பிற்குச் செல்ல முயன்றமை தெரிய வந்துள்ளது. இவர்கள் மூவரையும் அழைத்துச் சென்று அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அண்மைக்காலமாக பாடசாலைச் சிறுவர்கள் காணாமல் போவதாக பெற்றோர் பலர் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர். அதன் பின்னணியில் இவ்வாறான சம்பவங்களும் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

கும்போது இக்கரைசலின் மொத்த ஆவியமுக்கம் $P_{RS}$ ஆகும். குறித்தவொரு வெப்பநிலை (1) இல் தூயதிரவங்கள் ABRS இன் நிரம்பலாவி அமுக்கம் முறையே $P^o_A, P^o_B, P^o_R, P^o_S$ ஆகும். எல்லா வெப்பநிலைகளிலும் $P^o_A=P^o_R, P^o_B=P^o_S, P^o_A>P^o_B$ மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி விடையளிக்க.

(a) வெப்பநிலை T இல் $P_{AB}=P^o_B+X_A(P^o_A-P^o_B)$ எனக்காட்டுக.

(b) மேற்படி நிறுவலில் நீர் உபயோகித்த முக்கியமான எடுகோளை கீழே கூறுக.

(c) பின்வரும் மாறல்களை தெளிவாகக்காட்டுவதற்குத் தரப்பட்ட வரிப்படங்களில் வரைபுகள் வரைக.

(a) வரிப்படம் (i) இல் குறிக்க. வெப்பநிலை T இல் $X_A$ உடன் $P_A, P_B, P_{AB}$ ஆகிய ஒவ்வொரு ஆவியமுக்கங்களின் மாறல்.

(b) வரிப்படம் (ii) இல் குறித்த வெப்பநிலை T இல் XR உடன் $P_R, P_S, P_{RS}$ ஆகிய ஒவ்வொரு ஆவியமுக்கங்களின் மாறல் மு.க. வரிப்படங்கள் (i),(ii) ஆகியவற்றில் ஆவியமுக்கத்தைக் குறிப்பிடுவதற்கு இந்நிலைக்குத்து அச்சுக்களுக்கு சர்வசம அளவிடைகளைப் பயன்படுக்குக.




இந்தமாறல்களை இனங்காண்பதற்கு ஒவ்வொருவரிப்படத்திலுமுள்ள வரைபுகளையும் தெளிவாகப் பெயரிடுவதுடன் $P^o_A, P^o_B, P^o_R, P^o_S$ ஆகியவற்றைப் பொருத்தமான இடங்களில் இடுக. இடைவெளி நிரப்புக.

(c) கரைசலொன்றின் வெப்பநிலை அதிகரிக்கப்பட்டபோது அதனுடைய ஆவியமுக்கத்தில் ஒரு ............ ஏற்படும். அதன் மொத்த ஆவியமுக்கமானது.................. அமுக்கத்திற்கு சமனாகும்போது கரைசல் கொதிக்கும் என நாம் வழமையாக கூறுகிறோம். வழமையான கொதி நிலையில் இவ்வமுக்கம்.......................... அமுக்கத்திற்கு சமனாகும். தூயதிரவம் ...................ன் வழமையான கொதிநிலை தூயதிரவம் S இன் வழமையான கொதிநிலைக்கு சமனாகும். தூயதிரவங்கள் ................ ஆகியவற்றின் வழமையான கொதிநிலைகள் தூயதிரவம் B யின் வழமையான கொதிநிலையிலும் பார்க்க குறைவாகும். RS கரைசலானது இலட்சியநடத்தையில் இருந்து ................ விலகலைக் காட்டுகிறது. RS இன் சமமூலக் கரைசலொன்றின் மொத்த ஆவியமுக்கத்திலும் பார்க்க ............. ஆகவே மூலக்கரைசலொன்றின் வழமையான கொதிநிலை சமமூல செறிவுள்ள AB யின் கொதிநிலையிலும் பார்க்க...................... பெறுமானமுடையது.

14. எத்தனை கிராம் சுக்குரோசை $20^oC$ யிலுள்ள 552g நீருக்கு சேர்ப்பதன்மூலம் $20^oC$ யின் நீரின் தூயநிலை அமுக்கத்திலும் 2mmHg குறைவான ஆவிய முக்கத்தை உருவாக்கமுடியும். (தூயநிலை ஆவியமுக்கம் 17.5 mmHg).

15. ஆவிப்பறப்புள்ள இருதிரவங்கள் A,B ஆகியன ஒன்றுடனொன்று எல்லா அமைப்புக்களிலும் இலட்சியக்கரைசல்களைத் தருகின்றது. அவ்வாறான கரைசலொன்று வெப்பநிலை $68^oC$ யில் ஒரு நியம வளிமண்டல வெளியமுக்கத்தின் கீழ் கொதிக்க ஆரம்பிக்கின்றது. கொதிக்கும் இக்கரைசலின் திரவ அவத்தையில் A யின் மூல்பின்னம் 0.76 ஆக இருக்கும்போது, இதே கரைசலின் வாயு அவத்தையில் Bயின் மூல் பின்னம் 0.18 ஆகும். எல்லா வெப்பநிலையிலும் தூய Bயின் நிரப்பிய ஆவியமுக்கத்தைவிட தூய A இன் நிரப்பிய ஆவியமுக்கம் பெரிதாகும். $68^oC$ யின் தூய Bயினதும் தூய A யினதும் நிரப்பிய ஆவியமுக்கங்கள் முறையே $P^o_A, P^o_B$ ஆகும். ஒரு நியம வ.அமு. $1.0 \times 10^5 Nm^{-2}$ என்க.

1. மூலக்கூற்றிடைத்தாக்கத்தின் அடிப்படையில் A,B யின் துவிதக் கலவை ஒன்றின் இலட்சிய நடத்தையை விளக்குக.
2. $68^oC$ யில் கொதிக்கின்ற மேற்குறிப்பிட்ட கரைசலின் A,B ஆகியவற்றின் ஆவியமுக்கங்கள் முறையே $P_A, P_B$ இனை (பஸ்கல் அலகில்) கணிக்க நீங்கள் மேற்கொண்ட எடுகோளை கூறுக.
3. $68^oC$ யில் $P_A, P^o_A$ ஆகியவற்றிற்கிடையேயுள்ள கணிதத்தொடர்பை எழுதுக.
4 எந்தத்தூயதிரவம்(A or B) $68^oC$ யிலும் பார்க்கக் கூடிய நியம கொதிநிலை வைத்திருக்கும் என்பதை காரணங்கள் தந்து கூறுக.
5. ஒரு நியம வளிமண்டல வெளி அமுக்கத்தின் கீழ் A/B என்னும் தொகுதிக்கு வெப்பநிலை எதிர் அமைப்புப் பொருள் (composition) வரிப்படம் வரைக. முற்றாகப் பெயரிடுக.
6. மேலே காட்டிய வரிப்படத்தில் தெளிவாகப் பின்வருவனவற்றைக் குறிக்குக.

1. $68^oC$ வெப்பநிலை.
2. $68^oC$ யில் சமநிலையிலுள்ள திரவம் ஆவி அவத்தைகளின் அமைப்புப்பொருட்கள்.

7. திரவத்தை தொடர்ந்து கொதிக்கவைத்தால்,

1. திரவத்திலுள்ள Aயின் மூல் பின்னம்.
2. திரவத்தின் கொதிநிலை ஆகியவற்றில் நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றங்களை கூறுக. .உமது விடைக்குரிய காரணங்களைத் தருக.

16. இருதிரவங்கள் L,M என்பன முற்றாக கலக்கும் தகவுள்ள இலட்சியக் கரைசலை ஆக்குகின்ற இரு திரவங்களாகும். திரவம் L இன் நியம கொதிநிலை M இனதும் அதிகமாகும்.

1. L,M திரவத் தொகுதிக்கான வெப்பநிலை அமைப்புக்கூறு வரைபினை ஒரு நியம வளிமண்டல அமுக்கத்தில் கீறி முற்றாகக் குறிக்குக.
2. கீழ்காண்பனவற்றை தெளிவாக குறிப்பிடுக. அவற்றிற்குரிய குறியீடுகளை அடைப்புக்குறியினுள் தெளிவாகக் குறிப்பிடுக.

a) L இன்மூல்பின்னம் 0 - 8 ஆகுமாறுள்ள $X_1$ எனும் அமைப்புக்கூறு.
b) $X_1$ அமைப்புக்கூற்றுக்குரிய நியமக் கொதிநிலை $T_1$.
c) $T_1$ வெப்பநிலையில் கொதிக்கும் திரவத்தின் ஆவிக்குரிய அமைப்புக்கூறு $Y_1$.
d) $Y_1$ அமைப்புக்கூறுடைய ஆவி ஒடுக்கப்பட்டு உருவாகும் திரவத்தின் அமைப்புக்கூறு $X_2$.
e) $X_2$ அமைப்புக்கூறாக உள்ள திரவத்தின் கொதிநிலை $T_2$.
f) $T_2$ வெப்பநிலை கொதிநிலையாகக் கொண்ட திரவத்திற்குரிய அவ் வெப்பநிலைக்குரிய ஆவியின் அமைப்புக்கூறு $Y_2$.

3.

a) L,M இன் கலவையொன்று கொதிக்கும்போது பெறப்படும் ஆவியை ஒடுக்கி திரவமாக்கி அதை மீண்டும் கொதிக்கவைத்து ஆவியாக்கி இவ்வாறு பலதடவை செய்யப்படும்போது, இறுதியாக ஆவியில் எவ்வாறான அமைப்புவிகிதம் காணப்படும்.
b) இலங்கையில் இவ்வாறான தொழிநுட்பத்தைப் பாவித்து மேற்கொள்ளப்படும் தொழிற்சாலைச் செயற்பாடு ஒன்று தருக?
c) இவ்வாறான செயற்பாட்டின் பெயர் என்ன?
d) இச்செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகின்ற உபகரணத்தின் பெயர் யாது?

நறுமணஎண்ணெய்ப் பிரித்தெடுப்பிற்காக கொதிநீராவியைக் காய்ச்சி வடித்தல் பாவிக்கப்படும். இதன் இரு அனுகூலங்கள் தருக.

17. ஓர் நீர்க்கரைசல் திணிவுப்படி 5% யூரியா, $10\% C_6H_{12}O_6$ இனை கொண்டதெனின், கரைசலின் நிரம்பலாவி அமுக்கம் யாது? $P^o_{H_2O}=30$ mmHg.

18. $C_2H_4Br_2, C_3H_6Br_2$ இலட்சியக் கரைசலாக தொழிற்படுவன. $85^oC$ யில் இவற்றின் $p^o$ முறையே 173,127mmHg.

a) $10gC_2H_4Br_2$ $80gC_3H_6Br_2$ இல் கரைப்பின் பகுதி அமுக்கங்கள் யாவை?
b) மேற்படிக் கரைசலுடன் சமநிலையிலுள்ள ஆவியின் அமைப்புக்கூறு $C_2H_4Br_2$ இன் மூல் பின்னம் யாது?
c) ஆவியில் 50:50 மூல்விகிதம் உள்ளபோது $C_3H_6Br_2$ இன் மூல் பின்னம் கரைசலில் காண்க.($85^oC$ )

19. ஓர் கரைசலானது 30g ஆவியாக கரையத்தை 90g நீரில் கொண்டது. ஆவியமுக்கமானது 21.85mmHg ஆகும். மேலும் 18g நீர் கரைசலினுள் சேர்க்கப்பட்டது. விளைவுக்கலைசலின் ஆவியமுக்கம் 21.5mmHg

a) கரையத்தின் மூல்திணிவு யாது?
b) நீரின் தூய ஆவியமுக்கம் யாது?

இங்கே மடிக்கவும்



# மாணவர் மலர்



## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2003

**கீழே தரப்படும் பந்தியை வாசித்து 1 தொடக்கம் 14 வரையுள்ள வினாக்களுக்கு பந்தியிலிருந்து விடை தருக?**

நான் தன்னந்தனியே வழி தெரியாமல் நடுக்காட்டில் சென்று கொண்டிருந்தபோது, தூரத்தில் "சர சர" வென ஓர் சத்தம் கேட்டது.சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தேன். அப்போது விமானம் ஒன்றுஎன்னை நோக்கி வருவதைப் போன்ற ஒரு "கறுத்தச் சிங்கம்" என்மேல் பாய்ந்தது. நான் அம்மா! என அலறிக் கொண்டு எழுந்தேன். அப்போது தான் நான் கண்டது கனவுஎன எனக்குப் புரிந்தது.

**பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொல் தருக?**

1) சீயம்........................... 2)வனம் ..............................
3) பாதை......................... 4) அரவம்.........................

**பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களைத் தருக?**

5) தூங்கினேன்.................... நினைவு...........................
6) பந்தியிலுள்ள உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கை உள்ள ஒரு சொல் எது?
.......................................................................
7) "ஒரு கறுத்தச் சிங்கம்" என்பதன் பன்மை வாக்கியத்தை எழுதுக.
.......................................................................
8) இப்பந்தியிலிருந்து இணைமொழி ஒன்று தருக?
.......................................................................
9) சிங்கத்திற்கு கொடுக்கப்பட்ட உவமானம் யாது?
.......................................................................
10) சிங்கத்திற்கு கொடுக்கப்பட்ட அடைமொழி யாது?
.......................................................................
11) தன்னந்தனியே என்ற சொல்லின் சரியான வடிவத்தைத் தெரிந்து கீறிடுக.
(இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், அடுக்கிடுக்குத்தொடர்)
.......................................................................
12) இரட்டைக்கிளவி ஒலிக்குறிப்பினால் ஏற்பட்டது எது?
.......................................................................
13) "6" இக்குறியின் பெயர் யாது?
.......................................................................
14) இப்பந்தியிலுள்ள பெயரெச்சச் சொல்லாக வரக்கூடியது எது?
(சத்தம், கறுத்த, காடு)
.......................................................................

**பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்கான கருத்தைத் தமிழில் தருக?**

15) LION.........................................
16) JUMPING.................................
17) JUNGLE.....................................
18) HUNGRY....................................

**பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலச் சொல்லை (ஆங்கிலத்தில்) எழுதுக.**

19) என்னுடைய ...................... 20) 30 ..........................
21) கறுப்பு ............................

**தரப்பட்டுள்ள சொற்கள் ஒரு கடிதமுகப்பில் எவ்விடத்தில் இடம்பெற வேண்டுமென தீர்மானித்து, அச்சொல்லின் ஆங்கில முதல் எழுத்தை உரிய முகப்பில் எழுதுக.**

A - முத்திரை B - (From, இருந்து) சதீஸ், அம்பாறை
C - (To, க்கு) நஸீர் கல்முனை D - பதிவுத் தபால்
E - தபால் கந்தோர்



**பின்வரும் சுருக்கக் குறியீட்டின் விரிவைத் தருக?**

22) i) தே.க.தி ..........................................
ii) மா.ந.ச ..........................................

**பின்வரும் ஆங்கிலக் குறியீட்டின் விரிவைத் தமிழில் தருக?**

23) i) P.T.O ..........................................
ii) GS ..........................................

**கீழ்வரும் 24 - 36 வரையுள்ள கூற்றுக்கள் சரியாயின் அடைப்பிற்குள் "T"அடையாளமும், பிழையாயின் "F" அடையாளமும் இடுக.**

24) அண்மையில் செவ்வாய்க்கிரகம் பூமிக்கு அருகில் காட்சியளித்தது (.......)
25) இலங்கை வங்கி பணத்தை அச்சிட்டு வெளியிடும். (......)
26) காந்தத்தில் ஒத்த முனைகள் இரண்டும் கவரும். (.......)
27) மஞ்சள், நீலம், பச்சை அடிப்படை வர்ணங்களாகும். (.......)
28) வேலையை இலகுவாக்குவதற்கு இயந்திரங்களில் பற் சில்லுகள் பயன்படுத்தப்படும். (.......)
29) நிறச் சாயத்துளிகளை ஊதுவதன்மூலம் பல்வேறு அலங்காரங்களில் கோல ஆக்கங்களை உருவாக்கலாம். (.......)
30) 'கிரிகொர நடனம்' வேடுவர்களின் வழிபாட்டு நடனமாகும். (.......)
31) தலதாமாளிகை அமைந்துள்ள இடம் திருகோணமலையாகும். (.......)
32) தேசிய கீதம் பாடும்போது கால்கள் V வடிவில் இருத்தல் வேண்டும். (.......)
33) டெங்கு நுளம்பு அசுத்தமான நீரில் முட்டையிடும். (.......)
34) "ஈ-மெயில்" இல் உருவப்படங்களை அனுப்பமுடியாது. (.......)
35) வித்துக்களைப் பயன்படுத்தி அல்பனா ஆக்கம் செய்யலாம். (.......)
36) மரத்தவளை, தேரை ஈரூடகப் பிராணியாகும். (.......)

**37 ஆம் 38 ஆம் வினாக்களில் தரப்பட்ட படங்களை முழுமையாக உள்ளடக்கும் கருத்துள்ள மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

37)



1. பாரங்கூடிய பொருட்களைக் கொண்டு செல்லலாம்.
2. வெளிநாடுகளுக்குச் செல்ல உதவும்
3. போக்குவரத்துச் சாதனங்கள்

38)



1. ஒலி சாதனம்
2. ஒளி சாதனம்
3. ஒலி, ஒளி சாதனம்

▶ கீழ்வரும் பாடலை வாசித்து 40 ஆம் 41 ஆம் வினாக்களின் சரியான விடையின் கீழ் கீறிடுக.

*உள்ளக்கமலம் தன்னில் எதையும்*
*ஒழித்துவைபா எழில் நிலா*
*பிள்ளை மனது கொண்டு ஒளியைப்*
*பெய்து எங்கும் செல்லுதே!*

40) "பிள்ளை மனது கொண்டு ஒளியை எங்கும் பெய்து செல்லுதே" என்பதன் கருத்து
1. விளையாடிக் கொண்டு செல்கிறது
2. சூது, வாது கள்ளங்கபடமற்ற தூய்மையாக சேவை செய்கிறது
3. ஒன்றும் தெரியாமல் செல்கிறது

41) "எழில் நிலா" என்பதன் கருத்து
1. வட்டமான நிலா
2. அழகான நிலா
3. சிவப்பான நிலா

▶ இல 42-44 வினாக்களில் தரப்படும் தகவல்கள் பிழையானவை பிழையானதற்கான காரணம் எதுவெனத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை வெற்றுக்கூட்டினுள் எழுதுக.

42) புலி வாழைப்பழத்தை தோலுடன் தின்றது.
1. புலிக்கு கடுமையான பசி.
2. புலி வாழைப்பழம் தின்னாது.
3. புலி வாழைப்பழத்தோலை நீக்கியே தின்னும்.

43) பகலில் நட்சத்திரங்கள் அழகாக பிரகாசிக்கின்றன.
1. நட்சத்திரங்கள் பிரகாசிப்பதில்லை.
2. நட்சத்திரங்கள் பகலில் பிரகாசிப்பதில்லை.
3. நட்சத்திரங்கள் பகலில் பிரகாசிப்பதைக் கண்ணால் காண முடியாது.

44) பெப்ரவரி 30 ஆம் திகதி சுரேஸ் பிறந்தான்.
1. அப்படி ஒரு திகதி இல்லை.
2. சுரேஸ் ஒரு மனிதனல்ல.
3. சுரேஸ் ஒரு ஆண் ஆகும்.

45) கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற குமாருக்கு தொடர்ந்து மீன கிடைத்தது. இதனால் ஓடம் நிரம்பி குமாரும் ஓடமும் நீரில் மூழ்கினான். இதற்கு பொருந்தத்த பழமொழி
1. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
2. பேராசை பெரும் தரித்திரியம்
3. போதுமென்றமனமே பொன்செய்யும் மருந்து

46) 'உச்சி குளிர்தல்' என்ற மரபுத் தொடரின் கருத்து
1. மிக்க மகிழ்ச்சி
2. பனியில் நிற்றல்
3. உதவி செய்தல்

47) "நந்நன்றி கொன்றார்க்கும் முய்வுண்டாமுய்வில்லை செய்த் நன்றி கொன்ற மகற்கு" என்பதன் கருத்து
1. செய்த நன்றியை மறந்தவருக்கு மன்னிப்பே இல்லை
2. நன்றிக்கடனுக்கு தன்னையே அர்ப்பணம் செய்வர்
3. சிறிதளவு உதவி செய்தால் பெரிதாக மதிக்கத்தேவையில்லை

48) (வெட்டுதல், கறி, மரக்கறி, சந்தை சமைத்தல் ) இதில் உள்ள தகவல்களின், ஒழுங்கமைக்கப்பட்ட தகவலின் கீழ் கோடுக.
1. கறி, மரக்கறி, சந்தை, வெட்டுதல், சமைத்தல்
2. மரக்கறி, வெட்டுதல், கறி, சந்தை, சமைத்தல்
3. சந்தை, மரக்கறி, வெட்டுதல், சமைத்தல், கறி

49) ஒரு குழந்தை சகவீனமுற்றபோது அவனுக்கு மருந்து எடுத்து வந்த சந்தர்ப்பத்தில் நடந்த ஒரு உரையாடல் மாறியுள்ளது. இது சரியாக அமையும் விடையின் கீழ் கீறிடுக
A. மகனை விரைவாக வைத்தியரிடம் அழைத்துச் செல்வோம்
B. பிள்ளைக்கு நல்ல காய்ச்சல் இம்மருந்தை கொடுங்கள் விரைவில் சுகமடையும்
C. இப்போது உடல் நடுக்கம் சிறிது குறைந்துள்ளது.
D. கசப்பாயினும் பரவாயில்லை மருந்து முழுவதையும் குடி.
E. மகனுக்கு காய்ச்சல் போலுள்ளது.
1. A,B,D,E,C
2. E,A,B,D,C
3. E,A,B,C,D

50) ராஜா, ராணி இருவரும் வயதுகளின் கூட்டுத்தொகை இப்போது 18. ஒரு வருடத்திற்கு முன் ராணியைவிட ராஜாவின் வயது 3 மடங்காகும். இன்னும் 10 வருடங்களின் பின் ராணியின் வயது யாது?
1. 15 2. 18 3. 12

51) இங்குள்ள ரின் தொகுதியின் பெறுமானம் யாது?



1. 349 2. 3049 3. 300409

▶ கீழே தரப்படும் DKLMVX எனும் 6 தாவரங்களை அவதானித்து, 15 தொடக்கம் 19 வரையான வினாக்களுக்கு தரப்படும் தகவல்களுக்கு அமைவான கூற்று சரியாயின் "X" உம் பிழையாயின "Y" அடைப்பினுள் இடுக

அ) K,M,L கிளையுடையது ஆனால் கிளை பலமற்றது.
ஆ) M,D,V உண்ணக்கூடியது கனிதரும் ஆனால் மிகச்சிறியது.
இ) V,K,L இலங்கையிலுள்ள ஆனால் இந்தியாவிலில்லை.
ஈ) D,V கிளை அற்றது ஆனால் பலமானது.
உ) L,X பலவர்ணப் பூக்கள் பூக்கும் வாசம் இராது.

52) K தாவரம் பலமற்ற கிளைகளையுடைய இலங்கையிலுள்ள ஒரு தாவரமாகும்
53) V தாவரம் பலமான கிளையற்ற உண்ணக்கூடிய கனி தரும்
54) V யும் D யும் இலங்கையிலுள்ள பலமற்ற கிளைகளையுடைய தாவரம்
55) L தாவரம் பல வர்ண பூக்களையுடைய இந்தியாவில் இல்லாத கிளைகளையுடைய தாவரமாகும்
56) உண்ணக்கூடிய கனிதரும், உறுதியானதும், ஒருவித்திலையுடையதும் இலங்கையில் உள்ளதுமான தாவரம் V ஆகும்

▶ இல 57 தொடக்கம் சரியான விடையின் கீழ் கோடிடுக

57) கீழ் தரப்படும் நேரங்களில் மணிமுள், நிமிடமுட்களுக்கிடையில் செங்கோணத்தைக் காட்டும் சரியான நேரத்தின் கீழ் கீறிடுக
1. 6.15 2. 2.15 3. 3.00 4. 6.30

58) கீழ்தரப்படும் நேரங்களில் மணிமுள் நிமிடமுட்களுக்கிடையில் கூர்ங்கோணத்தைக் காட்டுவது
1. 6.15 2. 12.15 3. 3.00 4. 12.30

"ஒரு பண்ணையில் ஆடும் கோழியும் உள்ளது. ஆட்டின் கால்களை விட கோழியின் கால்கள் 6 கூடுதலாகவுள்ளது. ஆனால் மொத்த கால்கள் 38 ஆகும்"

59) இங்குள்ள கோழியின் மொத்தக் கால்களின் எண்ணிக்கை
1. 16 2. 22 3. 19 4. 12

60) இங்குள்ள ஆடுகளின் எண்ணிக்கை
1. 8 2. 4 3. 16 4. 10

61) அருகிலுள்ள நாயின் உருவத்தை வெட்டிப்பொருத்தினால் சரியான நாயின் உருவம் தோன்றும் விடை எது?



| 1. | | 2. | | 3. | |
|---|---|---|---|---|---|
| C | D | C | B | C | B |
| A | B | A | D | D | A |

K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்



க.பொ.த. உயர்தரம்

# இரசாயனவியல்

# அவத்தைச்சமநிலை

S.பவன் (Bsc.)

01. A யினதும் B தூய ஆவி அமுக்கங்கள் 30mmHg, 60mmHg ஆகும்.
(a) A,B யின் 1:1 மூல் விகிதக்கரைசலில் நிரம்பலாவி அமுக்கம் யாது?
(b) A,B யின் 1:1 நிறை விகிதக்கரைசலில் நிரம்பலாவி அமுக்கம் யாது?
(c) 1:2 A,B யின் மூல்விகிதக்கலவையை ஆவியாக்கின் ஆவியில் கூறுகளின் மூல் எண்ணிக்கை யாது? (A யின் சா.மூ.தி.92 B யின சா.மூ.தி.78.)

02. $CH_3OH$, $C_2H_5OH$ ஆகியவை இலட்சியக்கரைசலை உருவாக்கும் இரு திரவங்கள். இவற்றின் தூய நிலை ஆவி அமுக்கங்கள் முறையே 91mmHg, 39mmHg. இவற்றின் சமதிணிவுகலக்கப்படும்போதும்.
(a) $P_{CH_3OH}$
(b) $P_{C_2H_5OH}$
(c) மொத்த அமுக்கம் யாது?

03.
(a) 2மூல்  3 மூல்  கொண்ட கரைசல் ஒன்றின் மொத்த ஆவியமுக்கம் குறித்த T இல் 280mmHg. இக்கலவையுடன்  இன் வேறொரு மூலை சேர்க்கும் போது கிடைக்கும் புதிய கரைசல் X இன் மொத்த ஆவியமுக்கம் 300 mmHg. இவ் வெப்பநிலையில் கரைசல் X உடன் சமநிலையிலுள்ள ஆவியில் பென்சிலினின் மூல்பின்னத்தைக் காண்க.
(b) திரவ அயடோமெதேனுக்கும் அதன் ஆவிக்குமிடையே இயக்கவியற் சமநிலை நிலவுகின்றது என்பதை எங்கனம் பரிசோதனை முறையாகக் காட்டுவீர்?

04. குறித்த வெப்பநிலை ஒன்றிலே தூய Aயின் ஆவியமுக்கமானது தூய Bயின் ஆவியமுக்கத்தின் இருமடங்காகும். இலட்சியமுறையில் நடந்துகொள்ளும் துவிதக்கரைசல் ஒன்றில் A:B மூல் விகிதம் 1:1 ஆகும். அவ்வெப்பநிலையில் கரைசலின் மொத்த அமுக்கம் / தூய ஆவி அமுக்கம் எனும் விகிதத்தை காண்க.

05. A,B என்பன ஒன்றுடனொன்று முற்றாகக் கலக்கக்கூடிய இரு திரவங்களாகும். $25^{oC}$ யில் தூய Aயின் ஆவியமுக்கம் 400mmHg. 2 மூல் Aயும் 3மூல் Bயும் அடங்கியுள்ள கலவையின் ஆவியமுக்கம் $25^{oC}$ யில் 280mmHg இலட்சிய நடத்தையைக் கருதி
(a) $25^{oC}$யில் தூய B யின் ஆவியமுக்கம் யாது?
(b) $25^{oC}$யில் வாயுஅவத்தையில Bயின் மூல் பின்னம் யாது?
(c)  இலட்சிய நடத்தையை காட்டுகின்றது $CH_3COCH_3$/ $CHCl_3$ மறைவிலகலை காட்டுகின்றது. மேற்படி அவதானிப்புகள் இரண்டையும் பூரணமாக விளக்குக.

06. 19.12g $CHCl_3$ம் 2.32g அசற்றோனும் கொண்ட கரைசல் $35^{oC}$ இல் 265mmHg ஆவியமுக்கத்தைக் கொண்டுள்ளது. 35°C இல் தூய குளோரோபோம், தூய அசற்றோனின் ஆவியமுக்கம் முறையே 360 mmHg, 346mmHg.
(a) இவை இலட்சியக்கரைசலாகத் தொழிற்பட்டிருப்பின் ஆவயமுக்கம் யாதாக இருக்கும்.?
(b) மேலே நீர் பெற்ற விடையில் இருந்து தரப்பட்ட திரவக்கரைசல் எவ்வகையான விலகலைக் காண்பிக்கும்.
(c) $CHCl_3$ $CH_3COCH_3$ கலவைகளின் கொதிநிலைகள் அமைப்பு விகிதத்துடன் எவ்வாறு மாறுபடும் என வரைபுபடுத்துக.

07. $20^{oC}$ யில் ஈதரின் ஆவியமுக்கம் 441mmHg ஈதரின் மூ.கூ.தி 74. A என்னும் ஆவிப்பறப்பற்ற கரையம் ஒன்றின் 6g ஆனது 148g ஈதரில் கரைக்கப்பட்டது. இதேவெப்பநிலையில் இந்தக் கரைசலின் ஆவியமுக்கம் 420mmHg கரையம் A இன் சா.மூ.தி.யாது?

08. $20^{oC}$ யில் தூயநீரின் ஆவியமுக்கம் 17mmHg இவ்வெப்பநிலையில் 6g யூரியாவை 90g நீரில் கொண்டுள்ள கரைசலின் ஆவியமுக்கம் யாது?

09. நீருடன் இயல்பற்ற திரவம் A யும் நீரும் கொண்டகலவை ஒன்று கொதிநீராவியை செலுத்துவதன் மூலம் காய்ச்சிவடிக்கப்படுகின்றது. 1 atm வெளி அமுக்கத்தில் இந்தக் கலவை 372k இல் நீரின் நிரம்பலாவி அமுக்கம் 733mmHg எனின், Aயின் சா.மூ.தி. யாது?

10. A,B ஒன்றுடன் ஒன்று கலக்கும் தகவுடைய இருதிரவங்கள் இவற்றின் மூல்பின்னங்கள் முறையே $X_A, X_B$ ஆகும். குறித்த வெப்பநிலையில் இந்தக்கரைசலுடன் சமநிலையில் உள்ள ஆவி ஒடுக்கப்பட்டு மீண்டும் அதேபோல் ஆவி ஒடுக்கப்படும் போது A:B மூல் விகிதமானது $X_A/X_B$ $\{P^o_A/P^o_B\}^3$ எனக்காட்டுக.

11. இருதிரவங்கள் A:B மூல்விகிதங்கள் 2:3 ஆகுமாறு உள்ள இலட்சியக்கரைசல் $120^{oC}$ யில் கொதித்தது. சிறிது நேரம் கொதித்த பின் பெறப்பட்ட ஆவி ஒடுக்கப்பட்டு மீண்டும் கொதிக்க வைத்தபோது $115^{oC}$ யில் கொதித்தது. தூய A யின் கொதிநிலை $150^{oC}$ கொதிநிலை அமைப்புவிகிதத்துடன் சீராக மாறுகின்றது எனக்கொண்டு வரைபை வரைவதன் மூலம் தூய B யின் கொதிநிலையையும் முதலாம் ஆவியில் A,Bயின் மூல் பின்னத்தையும் காண்க.

12. 100g$H_2O$ இனுள் குறிப்பிட்டளவு கரையம் $25^{oC}$யில் சேர்க்கப்பட்டது. ஆவியமுக்கமானது தூயநீரிலிருந்து தற்போது அரைவாசியாக்கப்பட்டது. நீரின் ஆவியமுக்கம் 23.76mmHg சேர்க்கப்பட்ட உப்பின் அளவு யாது?

13. A,B ஆகியன முற்றாகக் கலக்கும் தகவுள்ள ஆவிப்பறப்புள்ள இருதிரவங்களாகும். A ஐயும் B ஐயும் கலக்கும்போது இவை ஒரு இலட்சிய துவிக்கரைசல் AB ஐ உண்டாக்குகின்றன. இதில் Aயின் மூல்பின்னம் $X_A$A யின் பகுதியமுக்கம் $P_A$ ஆகவும் B இன் பகுதி அமுக்கம் $P_B$ ஆகவும் இருக்கும்போது இந்தக் கரைசலின் மொத்த ஆவியமுக்கம் $P_{AB}$ ஆகும். R,S ஆகியவையும் முற்றாகக் கலக்கும் தகவுள் இருதிரவங்களாகும். R ஐயும் S ஐயும் கலக்கும்போது இவை ஒரு துவிக்கரைசல் RS ஐ உண்டாக்கும். இதில் R இன் மூல் பின்னம் $X_R$. R மூலக்கூறுகள் S மூலக்கூறுகள் ஆகியவற்றின் இடையேயுள்ள கவர்ச்சி விசைகள தனியே R மூலக்கூறுகளுக்கு S மூலக்கூறுகளுக்கு இடையேயுள்ள கவர்சி விசைகிலும் பார்க்க சொற்ப அளவில் வன்மையாகும். R,S ஆகியவற்றின் பகுதி ஆவியமுக்கங்கள் முறையே $P_R$,$P_S$ ஆக இருக்

யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்*
*கோடாமை சான்றோர்க்கு அணி*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### ரணில் என்ன செய்யப் போகிறார்?

சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றினை அரசியல்ரீதியில் எட்டுவதற்கான சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்கள் ஒரு தேக்க நிலையை அடைவதற்கு அல்லது நிரந்தரமாகவே முறித்துவிடுவதற்கான சூழ்நிலை மேலும் இறுக்கமானதொன்றாக வளர்ந்து வருகிறது.

சிறிலங்காவின் அரசியல் ஸ்திரத்தன்மையானது, எந்த வகையிலும் உறுதிப்படுத்தபடமுடியாத நிலையில் நாளுக்கொரு கோலம் கொண்டு வரும் நிலையில், ரணில் தலைமையிலான, எவ்வித அதிகார வளமுமற்ற ஒரு செயலற்ற நாடாளுமன்றம் சமாதான முயற்சிகள் தொடர்பாக எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்கமுடியாத சூழலில், தினம் ஒரு அறிக்கையை வெளியீடுவதன்மூலம் தமது இயக்கமற்ற தன்மையின் பரிதாபத்தை பகிரங்கப்படுத்தி வருகின்றது.

உண்மையில் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் என்ற முறையில் தனக்கு எந்தவிதமான உறுதியான அதிகாரங்களும் வழங்கப்படவில்லை என்றால், அரசியல் யாப்பின் பிரகாரம் சகல அதிகாரங்களும் ஜனாதிபதியிடம்தான் குவிக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத்தை இயக்குவதற்கான அதிகாரங்களை ஜனாதிபதியிடம் கேட்டுவாங்கித்தான் அவரால் பிரதமராக பணியாற்ற முடியுமெனில், ஒரு அமைச்சரவையை வெறுமனே ஒரு சம்பிரதாயத்திற்காக அமைத்திருக்கவேண்டிய அவசியமே கிடையாது.

அது மட்டுமல்லாது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினைக்கு அதாவது இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு சர்வதேச அனுசரணையுடனான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கமுன்னர், அதனை மேற்கொள்வதற்கு வேண்டிய அதிகாரங்கள் தனக்குள்ளதா என அவர் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கவேண்டும். அப்படி இல்லையெனில் அதற்கான அதிகாரங்களை யாரிடம் 'பிச்சை'யாக கேட்டுப்பெற வேண்டுமோ அவரிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டிருக்கவேண்டும். ஆனால், ரணில் அப்படி எதையும் செய்யவில்லை.

சமாதான முயற்சிகளை - தான் பதவியேற்றதும், சுயாதீனமாக ஆரம்பித்த ரணில், அதிகாரம் எதுவும் தன்வசம் இல்லாத நிலையில், அதனை பரந்தளவில் பிரசாரம் செய்து கொண்டு தொடர்ந்தபோதே, இந்தச் சமாதான முயற்சிகளை அங்கீகரிக்காத, எதிர்க்கும் மனோபாவம் கொண்ட, சகல அதிகார பலத்தையும் தன்வசம் கொண்டுள்ள தன் நேரடி அரசியல் எதிரியான ஜனாதிபதியால் அதற்கு இடையூறு ஏற்படும் சாத்தியம் குறித்தும் உணர்ந்திருக்கவேண்டும்.

ஜனாதிபதி சமாதான முயற்சிகளை ஏதோ ஒரு வகையில் எக்கட்டத்திலாவது குழப்பவே செய்வார் என்பதும், அது அவரது அரசியல் அபிலாஷைகளுக்கு அவசியம் என்பதும், சிறிலங்காவின் சாதாரண அரசியல் அறிவு கொண்ட அனைவரும் அறிந்திருந்த விடயமாகும்.

எனவே, ரணில் இது குறித்து உணர்ந்திருக்கமாட்டார் என்பதை எவரும் நம்பமாட்டார்கள்.

அரசாங்கத்தின் பொறுப்பு என்னிடம் இருந்தும் பேச்சை முன்னெடுக்கும் அதிகாரமில்லை என இன்றைய நிலையில் தனது இயலாத்தன்மையை வெளிப்படுத்தியுள்ள பிரதமருக்கு தனது இந்தப் போலிப் பதவி நிலை குறித்து ஆரம்பத்திலேயே நன்கு தெரிந்திருக்கவேண்டும்.

இப்போது பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதியிடம் பறிகொடுத்துவிட்டு, அந்த அமைச்சு தம்வசம் இல்லாமல் பேச்சுவார்த்தைகளைத் தொடரமுடியாதுள்ளது என அறிக்கை விடும் ரணில் விக்கிரமசிங்க, இந்த அமைச்சை அவரது அரசு பதவியேற்ற காலத்திலேயே ஜனாதிபதி தன்வசமே வைத்திருக்க விரும்பினார் என்பதையும், கடுமையான நிர்ப்பந்தங்களின் பின்னரே அதனை அவரின் அரசிடம் கையளிக்கமுன்வந்தார் என்பதையும் நன்கறிந்தவராகவே இருப்பார்.

இதன் அடிப்படையில் ஜனாதிபதி விருப்பின்றி கையளித்த பாதுகாப்பு அமைச்சை, தனக்கு தேவைப்படும் போது மீளவும் அவரால் பறித்துக்கொள்ளும் அதிகாரமும் கொண்டவராகவே உள்ளார் என்பதையும் , ரணில் அவர்கள் உணர்ந்து கொண்டிருக்கவே வேண்டும்.

அப்படி அவர் உணர்ந்திருப்பாரேயானால், ஜனாதிபதியின் நகர்வுகள் குறித்தும், சமாதான முயற்சிகளின் எதிர்காலம், அதனால் எவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் என்பது குறித்தும், அவர் தொலைநோக்குடன் சிந்தித்து காய்களை நகர்த்தியிருக்க முடியும்.

ஆனால், அவர் அப்படி எதனையும் தீர்க்கதரிசனத்துடன் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

அப்படி அவர் ஜனாதிபதியின் உள்நோக்கத்தை உணர்ந்து செயற்பட்டிருப்பாரேயானால் இப்போது இப்படியான 'புலம்பல' அறிக்கைகளை விடவேண்டிய தேவையிருக்காது.

இந்தநிலையில், அதிகாரம் எதுவுமற்ற - அவரின் பிரதமர் பதவிக்கே அச்சுறுத்தல் ஜனாதிபதியால் வரக்கூடிய சூழலில், தொடர்ந்தும் அப்பதவியில் நிலைத்திருப்பதுதான் ரணிலின் பலவீனம்.

இந்த நிலையில் தொடர்ந்தும் சமாதானம் குறித்து அவர் பேசுவதுதான் வேடிக்கையுமாகும்...

ஜனாதிபதி எந்தக் கட்டத்திலும் பாதுகாப்பு அமைச்சை மீண்டும் அரசிடம் கையளிக்கப் போவதில்லையென அவரின் ஊடகப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ் உறுதிபடக்கூறியுள்ளார்.

இந்தநிலையில் ரணில் என்னசெய்யப் போகிறார்?

சமாதான முயற்சி பற்றிய அவரின் அடுத்த கட்ட நகர்வு என்னவாக இருக்கப்போகிறது?

இதுவே இப்போதைய 'பலகோடி டொலர்' பெறுமதியான கேள்வியாகும்.

---

### அமைச்சர் மகேஸ்வரனுக்கு எதிராக

# பாதுகாப்பு அமைச்சின் செயலர் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார்

இராணுவத்தினரின் விநியோகப் பாதையைத் துண்டித்து, அவர்களது சிறப்புரிமையை மீறியமைக்காக, அமைச்சர் மகேஸ்வரன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக்கோரி, ஜனாதிபதியிடம் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சர் மகேஸ்வரன் எதுவித முன்னறிவித்தலுமின்றி கீரிமலைக்குச் செல்லமுயன்றுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் படையினர் - அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக வழமையாகப் பின்பற்றப்படும் நடைமுறைகளையே பின்பற்றியுள்ளனர். இதனாலேயே, அமைச்சர் மகேஸ்வரன் கீரிமலைக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் அமைச்சர் மகேஸ்வரன் தலைமையிலான குழுவொன்று, பலாலி வீதியினூடான இராணுவத்தினரின் போக்குவரத்தைத் துண்டித்துள்ளது. இது இராணுவத்தினரின் உரிமைகளை மீறும் செயலாகும். இது தொடர்பாக ஜனாதிபதி - அமைச்சர் மகேஸ்வரன்மீது இது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும்

### சங்கப் பதிவாளர் இ.இளங்கோவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் - இன்று சமூகத்தின்மீது காட்டும் அக்கறை, நாளைய ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்கும் செயல் என வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

அச்சுவேலி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய முன்பள்ளி மாணவர்களுக்கான இலவச சீருடை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

யாழ் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சியானது, கூட்டுறவுக் கொள்கைகளுக்கு உயிர்ப்பூட்டும் நடவடிக்கையாக அமைகின்றது. குறிப்பாக, கல்வி விருத்தி, சமூகத்தின் மீதான அக்கறை என்பன - கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்ளும் பாடசாலை உபகரணங்கள் வழங்கல், சீருடைத்துணி வழங்கல் போன்ற நடவடிக்கைகள் என்பன, வடக்கு - கிழக்கின் ஏனைய மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்லதொரு முன்னுதாரணம் ஆகும் எனவும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி, கணக்காய்வாளர் பொ.சிவலிங்கம், சிரேஷ்ட ஆணையாளர் கு.சண்முகநாதன், எ.சின்னத்தம்பி, விஜயமோகனராஜா, சமாச பொதுமுகாமையாளர் பொ.செல்வராஜா, தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுப் பொறுப்பாளர் இ.இலங்கன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(128)

# சைவபரிபாலனசபை நடத்திய கட்டுரைப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நாவலர் குருபூசைத் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாண சைவபரிபாலனசபை நடத்திய கட்டுரைப்போட்டியில், முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விபரங்கள் வருமாறு,

சசிகலா சந்திரன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம், பிளன்டிகா மகேந்திரன் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஸ்ரீ றஜிதா தியாகராஜா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி).

முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே - தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப்பதக்கம் என்பன எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

### நீராவியடி இளைஞன் கொலை

# மூன்று சந்தேக நபர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல்!

இளைஞர் ஒருவர் குத்திக் கொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கைதுசெய்யப்பட்ட மூன்று பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியில் - கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் ஊர்காவற்துறையைச் சேர்ந்த த.அஜந்தீப் (வயது 21) என்ற இளைஞர் கத்தியால் குத்தி கொலைசெய்யப்பட்டார்.

இக்கொலையுடன் தொடர்புடையவர்கள் எனக்கூறி நீராவியடிப் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் - நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றபோதே யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸாரால் இந்த மூவருக்கு எதிராகவும் குற்றப்பத்திரம் தாக்கல்செய்யப்பட்டது. சுயநோக்கத்திற்காக மூவரும் இணைந்து ஒருவரைக் கொலைசெய்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இக்கொலை தொடர்பாக சுருக்கமுறையற்ற விசாரணைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. நேற்று நடைபெற்ற விசாரணைகளின் பின் இவ்வழக்கு தொடர்பான விசாரணைகள், எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.(ச)

# ஆவணங்களற்ற 79 வாகனங்களின் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவையின்போது பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களற்ற 79 வாகனங்களின் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லையென மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வாகனங்களில் பல சட்டவிரோதமான முறையில் பாவனையிலிருந்ததாகவும் களவாடப்பட்ட வாகனங்கள் பலவும் இவ்வாறு பதிவுசெய்யப்பட முயற்சி மேற்கொள்ளப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதால் வாகனங்களின் பதிவுகள் மேற்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், நடமாடும் சேவையின்போது உரிய மூல சாரதி அனுமதிப்பத்திரம் இதுவரை கிடைக்கவில்லையென விண்ணப்பித்தோரில் 497 பேரின் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள் சட்டவிரோதமான முறையில் விநியோகிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களின் சாரதி அனுமதிப்பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. (ச)

# சென்.லூட்ஸ் நலன்புரி நிலைய மக்களுக்கு கற்கோவளம் பகுதியில் வீடமைக்க திட்டம்

### உதவித் திட்டப்பணிப்பாளர் தகவல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கிழக்கு சென்.லூட்ஸ் நலன்புரி நிலையத்தில் - வசிக்கும் குடும்பங்களுக்கு, கற்கோவளம் புனிதநகர் அரச காணியில் வீடமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக - யாழ்.செயலகத்திலியங்கும் புனர்வாழ்வு நடவடிக்கைப் பணியகத்தின் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கு.ஞானசேகரன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரித்ததாவது,

நாகர்கோயிலிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த 45 குடும்பங்கள் - பருத்தித்துறை கிழக்கிலுள்ள சென்.லூட்ஸ் நலன்புரிநிலையத்தில் தங்கியுள்ளனர்.

கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவரும் இந்த மக்கள், தற்போது பெய்துவரும் மழையால் சிரமங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளது.

இதனால், இங்குள்ள குடும்பங்களில் 20 குடும்பங்கள் தமக்குக் கற்கோவளப் பகுதியில் தற்காலிகக் கொட்டகைகளை அமைத்துத் தரும்படி கேட்டுள்ளனர்.

இதனால், அவர்களுக்கான சாதாரண கொட்டகைகள் உடனடியாக அமைக்கப்பட்டு, குடியமர்த்தப்படவுள்ளார்கள்.

இவர்களுக்கு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதமளவில், யூ.என்.எச்.சி.ஆர். மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றின் உதவியுடன், குடியிருப்புக்கான வசதியுடனான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

ஏனைய குடும்பங்களில் சில - குடாரப்பு பகுதிக்குச் செல்லவுள்ளதாகவும், மிகுதிப் பேருக்கு - அவர்கள் விரும்பும் இடங்களில் ஓரளவு வசதியுடனான வீடுகளை அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# பண்புடன் வாழ வலியுறுத்தும் மனித உரிமைகள் தினம்

உலகில் பிறந்த மனித உயிர்களுக்கெல்லாம் பெறுமதி குறைந்து, சாதாரண சம்பவமாகி சித்திரவதைகளும், கொடுமைகளும் உலகில் தாண்டவமாடிக் கொண்டிருந்தபோது, ஒவ்வொரு மனித உயிர்களுக்குமான உரிமைகளை வலியுறுத்தி உருவாக்கப்பட்டதே மனித உரிமைகள் ஆணைக்குழுவாகும்.

இது 1967 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சமூக அரசியல் உரிமைகள் சாசனத்தின்கீழ் உருவாக்கப்பட்டது. இதன் தலைமையகம் ஜெனீவாவில் இயங்குகின்றது

இந்த அமைப்பானது இலங்கையில் 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க சட்டமூலத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருந்தது. இதன் மூலம், இலங்கையில் சிங்கள அரசாங்கத்தினதும், அதன் படைகளதும் அடாவடித்தனங்களை உலகிற்கு அம்பலப்படுத்துவதாக அமைந்து கொண்டது.

இந்த அமைப்பின் உருவாக்கமானது - சர்வதேசரீதியில் கொலைகளைத் தடுக்காவிட்டாலும், குறைக்க உதவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐ.நாவின் செயலைப்போல, உலக வல்லரசாகத் திகழும் அமெரிக்காவின் அடாவடித்தனங்களை கண்டும் காணாமலும் விடுகின்றமை அதிகாரம்மிக்க நாடுகளின் சில உரிமை மீறல்களைத் தெரிந்தும் தெரியாமலும் நழுவுகின்றமை, பக்கச் சார்பாக நடந்து கொள்ளல் போன்ற சில குறைகள் இடம் பெற்றுவருகின்றதாகச் சிலரால் சுட்டிக் காட்டப்பட்ட போதிலும், வளர்முக நாடுகளின் பல்வேறு அசம்பாவிதங்களைத் தடுக்கும் வகையில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு உருவாகின்றமை வரவேற்கத்தக்க ஒன்றாகும்

ஒரு மனிதன் குழந்தையாகப் பிறந்து, வளர்ந்து, மணவாழ்வில் இணைந்து, பெற்றோராகி, பெற்றோரின் பெற்றோராகி, வயது முதிர்ந்து இறக்கும் வரையிலான காலப்பகுதியில் - அவன் உரிமைகள் எவை எவையென மிகவும் தெளிவாக விளக்கிக்கூறி நிற்கின்றமை, இந்த அமைப்பின் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாட்டிற்கு உறுதுணையாக அமைகின்றது.

இந்த அமைப்பின் சகல குறிக்கோளும் 30 உறுப்புரைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றினை ஆராயும்போது, ஓர் சுதந்திர மனிதன தோன்றுவதற்கான முழு விடயமும் உள்ளடக்கப்பட்டிருப்பது தெரியும்.

இன்று மனித உரிமைகள் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு, உலகம் முழுவதும் விழிப்புணர்வுப் பிரசாரங்களும், உரிமைகள் வலியுறுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் நிலையில், இந்த மனித உரிமைகள் சாசனத்தில் கூறப்படும் விடயங்கள் என்ன என ஆராயவேண்டும்

குறிப்பாக மனித உரிமைகள் அமைப்புக்கள் கவனிக்கவேண்டிய விடயங்கள் என்ன என்பது பற்றி ஞாபகப்படுத்த வேண்டிய நிலையும் உள்ளது.

ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர் வாழ்வதற்கான சுதந்திரம், பேச்சு, கல்வி, கலாசார, எழுத்து, மொழி, மத, சிந்தனை, தொழில், வாழ்க்கையைத் தெரிவுசெய்வதற்கான சுதந்திரமெனப் பல்வேறு வகையான சுதந்திரங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

ஒரு மனிதனின் சுதந்திரம் மற்றவனைத் துன்புறுத்துவதாக அமையக்கூடாது என்கிறது ஐ.நா. சபைப் பிரகடனம் ஒன்று. இதனை மிகத் தெளிவாகக் கூறுவதானால் - "ஒருவர் கையில் வைத்துச்சுழற்றும் கைத்தடியானது, மற்ற வரில் படக்கூடாது. வேண்டுமானால், மற்றவரின் மூக்கு நுனிவரை அத்தடி சென்று வரலாம்" என்கின்றது.

இதனாலேயே, சட்ட ஆட்சியை வலியுறுத்தும் பிரகடனமாக - மனித உரிமைகள் பிரகடனம் அமைந்துள்ளது. இதில் மனித உரிமைகள் சட்ட ஆட்சியின் வெளிப்பாடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரகடனத்தின் முதலாவது உறுப்புரையிலே - 'மனிதப் பிறவியினர் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும், மனச் சாட்சியையும் - இயற்பண்பாகப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவருடன் ஒருவர் சகோதர உணர்வுப் பாங்கில் நடந்துகொள்ளல்வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது - 1789 ஆம் ஆண்டின் பிரான்ஸியப் புரட்சியை நினைவுபடுத்துகின்றது.

ஏனெனில், அப்போதுதான் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் மூன்ற புனிதத்தன்மைகள் உலகிற்கு எடுத்தியம்பப்பட்டன.

அதன் ஆணிவேராக இன்று மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மனித சுதந்திரத்திற்கும்- மனித உரிமைகள் ஆணைக்குழு மிகமுக்கியமான இடத்தை வழங்குகிறது. இதற்குப் பல உறுப்புரைகள் ஆதாரமாக அமைகின்ற போதிலும், நான்காம் உறுப்புரையில் கூறப்படும் 'எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ, அடிமைப்படுத்தப்படுதலோ அல்லது அடிமைப்படுத்தப்பட்ட நிலையிலோ வைத்திருக்கப்படுதலோ ஆகாது எனக் கூறப்பட்டிருக்கின்றமையானது, யாழ். மக்களை - சிங்கள இராணுவத்தினர் திறந்தவெளிச் சிறையில், அடிமைப்படுத்தி நிற்கின்ற தன்மைக்கு எதிரானது. எனினும், இதுவரை அதற்கான சரியான தீர்வு கிட்டவில்லை.

இதேபோல்தான், தமிழ்மக்கள் கைது விடயத்திலும் - மனித உரிமை ஆணைக் குழுவினர் அதிகாரமற்ற அறிக்கை விடுபவர்களாக விளங்கும் ஒரு அமைப்பாக அதனை வெளிப்படுத்தி நிற்கின்றது. இது இன்று கொண்டாடப்படும் மனித உரிமைகள் தினத்தைக் கேள்விக்கிடமாக்குகின்றது.

உறுப்புரை ஒன்பதில் - ஒரு தலைப்பட்சமான முடிவால், எவரும் கைது செய்யப்படலாகாது எனக் கூறப்பட்டுள்ளபோதிலும், உறுப்புரை பதினொன்றில் - குற்றவாளி எனக் குறிப்பிட்டு, நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்வரை, எவரும் நிரபராதிகளே. அவர்களை யாரும் தண்டிகக முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இன்றுவரை பல நூற்றுக்கணக்கான தமிழ் உறவுகளின் இளையவர்களின் நிலை அறியப்படாத ஒன்றாகியுள்ளது. இதற்கான சரியான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்து, பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், காணாமற்போனோரின் உறவுகள் - யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் முன்மறியல் செய்கின்றனர். அது அவர்களது உள்ளக்குமுறலின் வெளிப்பாடே. அவர்களின் ஏக்கத்தின் இறுதி வடிவம் என்றுகூடக்கூறலாம்.

யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் - அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச்சங்கங்கள் தொடர்பான மனித உரிமை மீறல் விடயங்கள் பற்றி ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இது குறித்து விசாரணைகளும் இடம் பெற்று வருகின்றன. குறிப்பாக மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புகள் மறுக்கப்பட்ட விடயங்களிலும் மிகவும் சிறப்பாக பிரச்சினைகளை கையாண்டு, அவற்றில் வெற்றி பெற்றுக் கொடுத்துள்ளமை பாராட்டுக்குரியது.

மனித உரிமையை மதிக்கும்படி மனிதனை வலியுறுத்தும் இந்த ஆணைக் குழுவையும் நாம் மதித்து நடத்தல் வேண்டும். அப்போதுதான், அவர்களின் செயற்பாடுகளும் இடையூறின்றி இடம் பெறும். இந்த அமைப்பின் செயற்பாட்டாலேயே 1945 ஆம் ஆண்டின் பின்னான காலப்பகுதியில் லட்சக்கணக்கான உயிர்கள் சாவடையாமல் தடுக்கப்பட்டுள்ளதெனலாம். இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் - ஹிட்லர் 60 லட்சம் யூதர்களை இரக்கமற்றமுறையில் கொலை செய்திருந்தான்.

இது போன்று லட்சக்கணக்கானோர் கொலைசெய்யப்பட் சம்பவம், ஹிரோஸிமா, நாகசாகி மீதான அணுகுண்டுத் தாக்குதலால் ஏற்பட்டது.

இதில் 15 இலட்சத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்திருந்தனர். எனினும், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உருவாக்கத்தின் பின்னர், இத்தகைய லட்சக்கணக்கான உயிர்ப்பலி - இயற்கை அனர்த்தத்தால் அன்றி, வேறு எதனாலும் ஏற்படவில்லை என்று கூறலாம். எனினும், 1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற றுவாண்டாப் படுகொலைகள் துரதிர்ஷ்டவசமானதே.

எது எவ்வாறாயினும், இன்று உலகில் மனித உரிமைகளை வலியுறுத்தும் ஒப்பற்றநிலையில் மனித உரிமைகள் ஆணைக்கழு இயங்கிவருகின்றது.

இதனால், ஒவ்வொரு மனிதனும் தமக்கான உரிமைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில் முறையிடவும், நடுநிலைமையான விசாரணைகளை வலியுறுத்தியும், சிநேகபூர்வமாகத் தொடர்புகொள்ளக்கூடிய ஓர் இடமாக மனித உரிமைகள் ஆணைக்குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

**செந்தணன்.**

இதனால், உலகளாவியரீதியில் மதிப்புடன் கொண்டாடப்படவேண்டிய ஓர் தினமாக இந்தச் சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று உருப்பெற்றுள்ளது. மனிதனை மனிதன் மதித்துப் பண்புடன் வாழ வலியுறுத்தும் மனித உரிமைகள் அமைப்புக்களைப் போற்றவேண்டிய தேவை உள்ளது என்பதே இன்றைய உண்மையாகும்.

# நரிகளின் முகமூடிகள்



பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் பதவிக்குப் போட்டியிடுவதற் காக மின்னாமல், முழங்காமல் ஒரு திடீர் வேட்பாளராக லக்ஷ்மன் கதிர்காமரை சிறிலங்கா அரசு பிரேரித்தபோது - பல உலக நாடுகள் ஆச்சரியப்பட்டுப்போயின.

எதிர்பாராதமுறையில் கதிர்காமர் போட்டியிடவந்தாலும் எதிர்பார்த்தவாறே அவர் தோற்றுப்போய்விட்டார். சந்திரிகா அம்மையாரின் அதிரடி நடவடிக்கைகளுக்கு தமிழீழமும் இலங்கையும் ஏன் உலக நாடுகளுமே இப்போது பழக்கப்பட்டுப்போயிருப்பது உண்மைதான். ஆனால், அம்மையாரின் இந்த அண்மைய நடவடிக்கைக்கு ரணில் விக்கிரமசிங்கவும் துணைபோயிருப்பது சில அடிப்படை உண்மைகளை வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது.

இந்தத் திடீர் நாடகத்தின் பின்னாலுள்ள காரணிகளை நாம் சற்றுக் கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

பொதுநலவாய நாடுகளின் உறுப்பினராக இருந்து வந்த சிம்பாப்வேயின் உறுப்புரிமை தற்காலிகமாக ஓராண்டிற்கு இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தது. இதற்குக் காரணம் கடந்த ஆண்டு சிம்பாப்வேயில் நடைபெற்ற இடைத் தேர்தல் ஒழுங்கற்றமுறையில் நடைபெற்றதாகவும், அந்த ஒழுங்கற்ற தேர்தல் மூலம் ரொபேட் முகாபே தெரிவு செய்யப்பட்டது நியாயமற்றது என்றும் - தேர்தல் கண்கணிப்புக் குழு அறிவித்திருந்தது.

பொதுநலவாய நாடுகளின் அமைப்பிலிருந்து தற்காலிகமாக ஓராண்டிற்கு சிம்பாப்வேயின் உறுப்புரிமையை இடைநிறுத்திய முடிவை - பல ஆபிரிக்க நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதிபர் ரொபேட் முகாபேயிற்கு வேறு விதத்தில் தான் அரசியல் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று சில ஆபிரிக்க நாடுகள் கருதின.

இந்த நிலையில்தான் டிசம்பர் 5 ஆம் திகதி நைஜீரியாவில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெற்றது. அதில் பொதுநலவாய அமைப்புக்களின் புதிய செயலாளர் பதவிக்கான தேர்தலும் இடம்பெற்றது. இந்தவேளையில் சிம்பாப்வேயின் ரொபேட் முகாபேயின் கடும்போக்குகளை விமர்சித்து வருபவரும், பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளருமான நியூஸிலாந்து நாட்டின் டொன் மக்னன் மீண்டும் இச்செயலாளர் பதவிக்குப் போட்டியிட்டார்.

டொன் மக்னன் பசுபிக் பிராந்திய நாடுகளும், கரபியன் பிரதேச நாடுகளும் முக்கியமாக அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளும் தங்கள் ஆதரவை ஏற்கனவே தெரிவித்து இருந்தன.

இதில் மிகமுக்கியமாக நாம் கவனிக்க வேண்டியவிடயம் ஒன்றுண்டு. கடந்த செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - நியூஸிலாந்து வெளியுறவு அமைச்சருக்கு ஓர் உறுதி அளித்திருந்தார். நியூஸிலாந்து நாட்டின் டொன் மக்னன் இரண்டாவது தடவையாக பொதுநலவாய அமைப்புக்களின் செயலாளராக வருவதற்கு இலங்கை தனது ஆதரவை நல்கும் என்பதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூஸிலாந்து நாட்டிற்கு அளித்த உறுதிமொழியாம். அப்படியென்றால் செப்டம்பர் மாதத்திற்கும் நவம்பர் மாதத்திற்குமிடையில் என்னதான் நடைபெற்றது?

ஒழுங்கீன முறையில் தேர்தலை நடத்திப் பதவிக்கு வந்தவர் என்றும், நிறவெறி பிடித்தவர் என்றும், மனிதஉரிமை மீறல்களைச் செய்துவருபவர் என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ள ரொபேட் முகாபேயிற்கு ஆதரவான சில ஆபிரிக்க நாடுகள் - டொன் மக்னனின் தெரிவுக்கு எதிராகக் காய்களை நகர்த்த ஆரம்பித்தன. இதற்குத் தகுந்த குணாதிசயங்களையும், கெட்டித்தனத்தையும் கொண்டவர் வேறுயாராக இருக்கமுடியும்? ஆகவே, இந்த நாடுகள் லக்ஷ்மன் கதிர்காமரைக் குறிவைத்து அவரை அணுகின.

**மெல்பேர்னில் இருந்து சபேசன்**

நவம்பர் மாத நடுப்பகுதியில் கதிர்காமர் ருமேனியா நாட்டிற்குச் சென்றார். பின்னர் ஜெனிவா நகருக்கச் சென்றார். பின்னர் ஜெனிவா நகரிலிருந்து லண்டன் நகர் சென்றார். ருமேனியாவிலும், ஜெனிவாவிலும் பின்னர் லண்டனிலும் திரைமறைவில் பல இரகசியக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. டன்சானியா போன்ற நாடுகளின் இராஜதந்திரிகளும் லக்ஷ்மன் கதிர்காமரை பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளருக்கான தேர்தலில் போட்டியிடும்படி அவரைக் கேட்டுக்கொண்டனர்.



கதிர்காமர் பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளராக போட்டியிட வேண்டுமென்ற கருத்தை ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். இந்த விடயத்தில் மட்டும் சிங்களதேசத்தின் இரண்டு பெரும் தலைமைகளும் இணைந்துகொண்டன.

பொதுநலவாய நாடுகளின் ஐம்பத்திரண்டு தலைவர்களுக்கும் கதிர்காமரை ஆதரிக்கக்கோரி ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தை எழுதுவதற்குத் தன்னுடைய அனுமதியையும், சம்மதத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளித்தார்.

இதுதொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா உடனடியாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைத் தொடர்புகொண்டார் என்றும், அதன் பின்னர் தன்னைச் சந்தித்த கதிர்காமருக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(09 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்.

# ஈராக்கில் கார் குண்டுத் தாக்குதல்

# 41 அமெரிக்கப் படையினர் காயம்!

## ஹெலிகொப்ரர் மீதும் ஆர்.பி.ஜி. தாக்குதல்



(பாக்தாத்)

அமெரிக்கப்படையினரின் தளம் ஒன்றிற்கு அருகில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில், 41 அமெரிக்க போர்வீரர்கள் காயமடைந்தனர். இச்சம்பவம் மொசுலின் தென்பகுதியில் அமைந்த 'ரல் அபார்' என்ற தளத்தில் நடைபெற்றுள்ளது.

வாகனமொன்று அமெரிக்கப் படையின் கட்டளைக்கு இணங்க மறுத்ததால், துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டபோது, ஏற்பட்ட பதில்தாக்குதலில் போர்வீரர்களுக்கு காயமேற்பட்டுள்ளதாக அமெரிக்கப் படை அதிகாரி 'ரேய்கேற்' தெரிவித்துள்ளார்.

அத்துடன், பக்தாத்தின் மேற்குப் பகுதியான பலூயாவில் நேற்று அமெரிக்க ஹெலிகொப்ரர் மீது ஈராக்கிய கெரில்லாப் போராளிகளினால் ஆர்.பி.ஜி தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் ஹெலி உடனடியாகத் தரையிறக்கப்பட்டதாகவும், அந்தக் ஹெலியில் பிரயாணம் செய்தவர்கள் எதுவித பாதிப்புமின்றி வெளியேறியதாக அமெரிக்க இராணுவ மேஜர் பீற்றர் ஜே.மிற்செல் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற நேரத்தில் ஒ எச் - 58 என அழைக்கப்படும் இரு ஹெலிகொப்ரர்கள் வானில் பறந்துகொண்டிருந்தாகவும், அதில் ஒன்று ஆர்.பி.ஜி. தாக்குதலுக்குள்ளானதாவும் அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே 'சனி' முஸ்லிம்களின் பள்ளிவாசலில் ஏற்பட்ட குண்டுத்தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டும் இருவர் காயங்களுக்குட்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# காஷ்மீர் பஸ் விபத்தில் 22 பயணிகள் பலி!

(சென்னை)

இந்தியாவின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசமான காஷ்மீரில் 'மகர்கொற்ற' என்ற கிராமத்தில் பஸ் ஒன்று பாதையில் இருந்து விலகி பள்ளத்தாக்கினுள் விழுந்ததில் 22 பிரயாணிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் உல்லாசப் பிரயாணிகளின் பிரதேசமான ஜம்முவில் நடைபெற்றுள்ளது. காஷ்மீரின் செங்குத்தான மலைப்பிரதேசத்தில் பஸ் விபத்துகள் அடிக்கடி நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பஸ் வண்டியில் அளவிற்கதிகமான பிரயாணிகள் ஏற்பட்டிருந்தமையும் விபத்திற்கான காரணமெனத் தெரிவிக்கப்பட்டது.

# உலக நோக்கு

## ஆப்கான் கிழக்குப் பகுதியில்

# தலிபான் போராளிகளுக்கெதிராக இராணுவ நடவடிக்கை ஆரம்பம்!



ஆப்கானிஸ்தானில் கிழக்குப் பகுதியான 'கொஸ்ட்' நகரில் - பதவிநீக்கப்பட்ட தலிபான் ஆட்சிக் காலத்து எஞ்சியுள்ள தலிபான் போராளிகளை அந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கை ஒன்றினை 100 இற்கு மேற்பட்ட வான் படையின் உதவியுடன் ஆப்கானிஸ்தான் படையினர் மேற்கொண்டுள்ளனர். இந்த படை நடவடிக்கையில் 2000 இற்கு மேற்பட்ட ஆப்கானிஸ்தான் படைகள் ஈடுபட்டுள்ளன.

தலிபானின் எஞ்சியுள்ள போராளிகளை கண்டுபிடிப்பதில் முழுமையான வெற்றி அமெரிக்க படையினருக்கு கிடைக்கவில்லை என பி.பி.சியின் 'பியேர்சன்' தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின் அவர்களுக்கு எதிராக நடத்தப்படும் மிகப்பெரிய தேடுதல் நடவடிக்கை இது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலஸ்தீனப் போராளிகள்

# நடவடிக்கைகளை நிறுத்தாத வரை சமாதான முயற்சிகள் நடைபெறாது!

பலஸ்தீனியப் போராளிக் குழுக்கள் தமது செயற்பாடுகளை நிறுத்தாத வரை சமாதான முயற்சிகள் எதுவும் நடை பெறமாட்டாதென இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, சர்வதேச நீதிமன்றத்திடம் - பாதுகாப்புக் காரணமாகத் தெரிவித்து, பாரிய தடுப்புச்சுவர் ஒன்றை மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேல் அமைத்து வருவதில் ஏற்பட்ட சட்டச் சிக்கல்களை தீர்க்குமாறு கேட்டுள்ளது.

இதன் எதிரொலியாக ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பகுதியை மீண்டும் பலஸ்தீனியர்களிடம் கொடுப்பதற்கு இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் தீர்மானித்துள்ளார்.

முஸ்லிம் போராளிக் குழுக்கள், ஹமாஸ் மற்றும் ஜிகாத் ஆகிய வேறு மூன்று குழுக்களுடன் இணைந்து, இஸ்ரேலிய பொதுமக்களுக்கெதிரான தாக்குதலை நிறுத்துவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். ஆனால், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்பவர்கள், இஸ்ரேலிய படையினருக்கெதிரான தாக்குதல்களை நிறுத்தப்போவதில்லை என அந்த



இரு இயக்கமும் தெரிவித்துள்ளன.

இதனிடையே - செஸ்ரோவில் பலஸ்தீனிய முஸ்லிம் தீவிரவாத குழுக்கள் - இஸ்ரேலுடனான போர்நிறுத்த முயற்சிகள் தோல்வியடைந்தபின் மீண்டும் பலஸ்தீனக் குழுக்களிடையே இணக்கம் காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நரிகளின் முகமூடிகள்...

இது குறித்துத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்ததோடு, தனது அரசின் ஆதரவை வழங்குவதாக அறிவித்தார் எனத் தெரியவருகிறது.

இதன்பின்னர் பல விடயங்கள் மின்னல் வேகத்தில் நடைபெற்றன. ஜனாதிபதி சந்திரிகா - இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் தொடர்புகொண்டு, லக்ஷ்மன் கதிர்காமருக்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பொது நலவாய நாடுகளின் மகாநாடு நடைபெறவிருந்த நைஜீரிய நகரான அபுஜாவில் கதிர்காமருக்கு ஆதரவு தேடி - பல சிறு, சிறுகுழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்திய வெளிவிவகார அமைச்சர் யஸ்வந்த் சின்ஹா, பங்களாதேஷின் வெளிவிவகாரச் செயலாளர் பெக்கி (MBEKI) போன்றோர் தங்கள் ஆதரவை கதிர்காமருக்கு வெளிப்படையாகவே தெரிவித்தார்கள்.

ஆனால், நடந்த இரகசியத் தேர்தல் கள்ள வாக்குத் தேர்தலாக இல்லாத காரணத்தால் டொன் மக்னனுக்கு 41 வாக்குகளும், கதிர்காமருக்கு 11 வாக்குகளும் கிடைத்தன. டொன் மக்னன் அமோக வெற்றிபெற்று மீண்டும் பொதுநலவாய நாடுகளின் செயலாளராகத் தெர்ந்தெடுக்கப்பட்டார்.

இதுவொரு இரகசிய வாக்கெடுப்பாக இருந்தபோதும் - கதிர்காமருக்கு ஆதரவாக இலங்கையும், இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் ஏழு ஆபிரிக்க நாடுகள் வாக்களித்திருக்கலாம் - என்று கதிர்காமரே கூறியிருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறியிருக்கின்றன.

உள்நாட்டில் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காகவும், தமிழீழ மக்களின் வாழ்க்கையை- இன்னல் நிறைந்த அவலவாழ்க்கையாக மாற்றுவதற்காகவும் - கதிர்காமர் ஆற்றிய கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட இந்தக் கொடுமைகளை அபூர்வமாக வெளிக் கொண்டுவந்த நிறுவனங்களின் குரல்வளைகளை நெரிக்கவும் கதிர்காமர் தவறியதில்லை. விமானப் படையின் குண்டுவீச்சால் நவாலித் தேவாலயம் படுசேதமடைந்ததுடன், நூற்றுக்கணக்கில் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டதை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் வெளிக்கொணர்ந்தபோது - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாட்டைவிட்டே வெளியேற்றுவேன் என்று எச்சரித்தவர் இந்தக் கதிர்காமர்.

போர்க்குற்றவாளி என்று கருதப்படுகின்ற ஜனக பெரேராவை - அவுஸ்திரேலியாவிற்கான இலங்கைத் தூதுவராக நியமிப்பதற்காக சகல முயற்சிகளையும் எடுத்ததோடு மட்டுமல்லாது, இது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை எழுப்பிய விசனத்தையும் புறம்தள்ளியவர் இந்தக் கதிர்காமர்.

பயங்கரவாதிகள் என்று முத்திரைகுத்தப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட 24 தமிழ் இளைஞர்களை சிங்களக் காடையர்கள் கொன்றுகுவித்ததோடு, மேலும் 16 தமிழ் இளைஞர்களையும் காயப்படுத்திய சம்பவம் நடந்த பிந்துனுவெவ புனருத்தாரன நிலையத்தினை நிர்வகிப்பதற்கான செயற்குழு கதிர்காமரின் பொறுப்பி லேயே இருந்தது. அது மட்டுமல்ல புதுக் குடியிருப்பில் விமானப் படையினர் நடத்திய குண்டுவீச்சில் - தமிழ்ப் பொது மக்கள் கொல்லப்பட்டதை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்தபோது, கதிர்காமர்விட்ட அறிக்கையையும் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

'ஐக்கிய நாடுகள் சபை எமது உள்நாட்டு விடயங்களில் தலையிடக்கூடாது என்றும், நுளம்பிற்கு மருந்தடிப்பதையும், மலேரியாவைக் கட்டுப்படுத்துவது பற்றியுமே ஐக்கிய நாடுகள் கரிசனைகாட்ட வேண்டும்' என்று ஏளனமாகவும், காட்டமாகவும் ஐக்கிய நாடுகள் சபையினை இதே லக்ஷ்மன் கதிர்காமர் கண்டித்திருந்தார்.

இப்படிப்பட்ட மனிதநேயமற்ற, இரக்கமற்ற, நேர்மையற்ற ஒருவராகத் தெரிகின்ற கதிர்காமர் பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளராக நியமிப்பதற்காக இரண்டு சிங்களத் தலைமைகளும் ஒற்றுமையாகச் செயற்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன? அவர் எப்படிப்பட்ட கீழான குணநலன்களை உடையவராகக் இருந்தபோதும் - அவர் ஒரு புத்திசாலி, அறிவுஜீவி. தன்னுடைய சிறப்பு அம்சங்கள் மற்றும் திறமைகளையெல்லாம்- பௌத்த சிங்கள பேரினவாதத்தின் மேலாண்மைக்கே முற்றிலுமாக அர்ப்பணித்துள்ள ஒருவர். தம்முள் வேறுபட்டிருந்தாலும் அவரை ஆதரிப்பதனை எந்தச் சிங்களத் தலைமையுமே செய்யும். அதனைத்தான் சந்தி ரிகா அம்மையாரும், ரணில் விக்கிரமசிங்கவும் இன்று செய்திருக்கிறார்கள். இந்தச் சம்பவம் சந்திரிகாவின் முகமூடியை மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்கவின் முகமூடியையும் கிழித்துக் காட்டியுள்ளது.

முகாபே போன்ற கடும்போக்காளர் களை ஆதரிப்பதற்கும், அவரது செயல் களை நியாயப்படுத்துவதற்கும் - இந்த 52 நாடுகளில் மிகச் சிறந்தவராக கதிர்காமரைத்தான் ஆபிரிக்க நாடுகள் இனம்கண்டுள்ளன என்றால், அவருடைய (சுப) கீர்த்தி பற்றி அனைவரும் அறிந்துள்ளார்கள் என்பதையும் நாம் உணரக்கூடியதாகவுள்ளது.

லக்ஷ்மன் கதிர்காமர் வெற்றிபெற்றால் - அவரூடாக சிங்கள பௌத்த பேரினவாதத்தை நியாயப்படுத்தலாம் என்ற எண்ணத்தில்- 41 பொதுநலவாய நாடுகளின் கருத்திற்கும், விருப்பத்திற்கும் எதிராகச் செயற்படுவதற்கும் இலங்கை தயாராக இருந்திருக்கின்றது என்ற விடயத்தையும் நாம் இங்கே உணரக்கூடியதாக உள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் 'நியூஸிலாந்து வேட்பாளரை ஆதரிப்போம்' என்று ரணில் விக்கிரமசிங்க கொடுத்த வாக்குறு தியை, நவம்பர் மாதத்திலேயே அவர் காற்றில் பறக்க விட்டார் என்ற நிதர்சனத்தையும் நாம் இங்கே காண்கின்றோம்.

லக்ஷ்மன் கதிர்காமர் தோற்றுவிட்டார் என்று - புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிடக்கூடும்! சந்திரிகா அம்மையாரினதும், ரணில் விக்கிரமசிங்கவினதும் இந்த நடவடிக்கைகள் அவர்களுக்கு உலக அரங்கில் தர்மசங்கடத்தை அளித்துள்ளன என்ற உண்மையை உணர்ந்தும். உலகத் தமிழ் மக்கள் மகிழ்வுகொள்ளக்கூடும். இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து போன்ற பல உலக நாடுகளின் அதிருப்தியை இலங்கை தற்போது சம்பாதித்துள்ளது. இவர்களுக்கும் இப்போது உண்மை புரியும் என்ற எண்ணமும் எம்மவருக்கு ஏற்படக்கூடும்.

ஆனால், இதற்கும் அப்பால் இதேபோன்ற அபாயங்கள் எதிர்காலத்தில் வரக்கூடும். அப்போது அன்றைய அரசியல் நிலையைப் பொறுத்து மீண்டும் உலக நாடுகள் பாராமுகமாக இருக்கவும்கூடும். அதற்கு உலகத் தமிழர்கள் தயாராக இருக்கவேண்டும். திடீரென்று உருவாகிய இந்த பொது நலவாய புது வேட்பாளர் சம்பவத்தை ஒரு பாடமாக நாம் ஏற்றுக்கொண்டு எதிர்காலத்தில் இவ்வாறு ஏற்படக்கூடிய அரசியல் திருப்பங்களுக்கு முகம் கொடுத்துச் செயற்படக் கூடிய வகையில் நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

'நரிகளின் முகமூடிகள் கிழிகின்றன. உண்மைதான்'. ஆயினும், நரிகளின் குணம் மாறப்போவதில்லை. நாளை வேறொரு முகமூடி வரலாம், அல்லது வேறொரு மேடை வரலாம்! ஆனால் இதே நரிகளும். அதே குணங்களும்தான் அரங்கேறக் காத்து இருக்கின்றன. அரசியல் களத்திலே இப் போது நடைபெறுகின்ற தமிழர் போராட்டம்- இத்தகைய சலசலப்புகளுக்கு முகம்கொடுக்கத் தயாராக இருக்கவேண்டுமென்றால் உலகத் தமிழினம் ஒன்றிணைந்து ஒற்றுமையாகச் செயற்படவேண்டும்.

உள்நாட்டில் நிலைமை எதுவாக இருந்தாலும், வெளிநாடுகளில் தமது கரத்தைப் பலப்படுத்திக்கொள்ள முயல்வதில் எந்த சிங்கள அரசுமே தவறியதில்லை. 1999 இல் யுனெஸ்கோவின் செயலாளர் நாயகப் பதவிக்காக இலங்கை முயன்று அதில் தோல்வி கண்டதும் - நாம் அறிந்த விடயங்களே!

இன்று பொதுநலவாய நாடுகளின் செயலாளர் பதவிக்கு முயன்றிருக்கின்றது. அதைப்போல், எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளர் நாயகமான கோபி அனான் ஓய்வுபெறும்போது அவரிடத்தை நிரப்புவதற்காக - இலங்கையின் தற்போதய வெளிவிவகார அமைச்சரான டிரோன பெர்ணாண்டோவை சிபாரிசுசெய்யும் முயற்சியில் இலங்கை இப்போதே இறங்கிவிட்டது.

ஆகவே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக - வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் உலக அரங்கிலும், உலக அரசிலும் உருவாகக்கூடிய செயற்பாடுகளுக்கு முகம்கொடுப்பதற்கும், அவற்றை எதிர்த்து எமது மக்களின் போராட்டத்திற்கான நியாயத்தை நிரூபிப்பதற்கும் - உலகத்தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பஸ்நிலைய சம்பவத்தைக் கண்டித்து நாளை யாழ்.குடாநாட்டில் ஹர்த்தால்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்ப்பகுதியில் நேற்று நடைபெற்ற சம்பவத்தைக் கண்டித்து - நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு, யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

நேற்று மாலை யாழ்.பஸ் நிலையப்பகுதியில் பத்திரிகை விற்றுக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். இதனைக் கண்டித்தே நாளை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் சகல அலுவலகங்களும், கல்விக்கூடங்களும், கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்தும் எதிர்ப்பினைக் காட்டுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தனியார் சிற்றூர்திகள் மற்றும் இ.போ.ச பேருந்துகள் தங்கள் சேவைகளை இடைநிறுத்த வேண்டும்.

க.பொ.த(சா/த) பரீட்சைகள் நடைபெறுவதால் அதற்கு இடையூறு ஏற்படாது மட்டுப்படுத்தப்பட்ட சேவையை போக்குவரத்து சபையினர் மேற்கொள்ளலாம் என்றும்,

திட்டமிட்டு சமாதான சூழலைக் குழப்பி, நாட்டில் மீண்டும் போரை ஏற்படுத்த படையினர் முயன்றுவருகின்றனர் என்றும் பொது அமைப்புக்களின் ஒன்றியம் குற்றம்சாட்டியுள்ளது.

## நாற்சந்தி

சமாதான முயற்சிகள் தோல்வி கண்டால் புலிகளை யுத்தத்தில் சந்திக்கவும் தயார்

'என்ன சந்திரிகா மாதிரி அறிக்கை விட்டு மிரட்டுகிறாய்...'

'நான் அறிக்கை விடேல்லை மணியம் சந்திரிகாவின் ஆள் தான் இப்பிடி அறிக்கை மிரட்டலை விடுத்திருக்கிறார்...'

'சந்திரிகாவின் ஆள் என்றால் ஒன்று சந்தகிரியா இருக்கவேண்டும் அல்லது பலகல்லவாக இருக்கவேண்டும். நான் சொல்லுறது சரிதானே? கனகு...'

'மெத்தச்சரிதான்... பலகல்லேதான் மிரட்டியிருக்கிறார். அதுவும் இந்தியாவில... காஷ்மீரில நின்றுகொண்டுமெல்லே மிரட்டியிருக்கிறார்...'

'சந்திரிகா பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதும் இனி சமாதானம் அல்ல... சமாதானத்துக்கான யுத்தம் தான் எனத் தீர்மானித்திட்டார் போல... இதைப்போய் இந்தியாவில் நின்று கொண்டு ஏன் கூறவேண் டும்...?'

'ஆனையிறவு அடியோட அலமலர்ந்துபோன சந்திரிகாவுக்கு கை கொடுத்த தெய்வம் இந்தியாதானே... அதுபோல் இனிமேலும் கைகொ டுக்க வேண்டிய தேவை வரலாம் என்பதை இந்தியாவுக்கு உணர்த்தவும் கூறியிருக்கலாம்...'

'என்னவோ சிறிலங்கா படைகளுக்கும், ஜனாதிபதிக்கும் பட்டறிவும் போதாது, பகுத்தறிவும் போதாது போல... சமாதானத்துக்கான கடைசி வாய்ப்பையும் கைநழுவ விட்டுட்டு கையைப் பிசைந்துகொண்டு நிக்கப் போயினம்போல கிடக்கு...?'

'என்னவோ... இனிச் சிறிலங்காவை கடவுள்தான் காப்பாற்ற வேண் டும்...'

-தெருவாசி

# நேற்றைய சம்பவத்தை கண்டித்து பொது அமைப்புக்கள் அறிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்றுமாலை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தை பொதுஅமைப்புகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் முயற்சிகளை குழப்புவதற்காகவே படையினர் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சமாதானச் சூழலைக் குழப்பி மீண்டுமொரு போரைத் தமிழ்மக்கள் மீது திணிக்கும் நோக்குடன் பத்திரிகை விற்ற இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

படையினர் மேற்கொண்ட கோழைத்தனமான இந்த நடவடிக்கையைத் தமிழ்மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் அமைதிச்சூழலை குழப்புவதற்காக ஆயுதப்படைகள் திட்டமிட்ட முறையில் இவ்வாறு நடந்துகொண்டதாக யாழ். மாவட்ட பொதுஅமைப்புகளின் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்து இருபது மாதங்கள் கழிந்த பின்னர் யாழ். நகர் பகுதியில் இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டமை சமாதான சூழலைக் கையை சீர்குலைக்கும் நடவடிக்கை என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இந்தச் சம்பவத்தை வன்மையாக கண்டித்துள்ளதாக அறிக்கைவெளியிட்டுள்ளனர்.

## பத்திரிகை விற்றுக்கொண்டிருந்த...

இதுபற்றி அறிவித்தார். உடனேயே நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரின் செயலகத்துக்கு போர்நிறுத்த கண்காணிப்பு குழு பிரதிநிதிகள் வருகைதந்தனர். மேற்படி சம்பவம் தொடர்பாக என்னிடம் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தனர். பின்னர் நல்லூர்க் கோட்ட அரசியற்துறை பொறுப்பாளர் யாழ். போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதியிடம் என்னை ஒப்படைத்தார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை பற்றி நல்லூர் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் கேட்டபோது இந்த விடயம் வன்மையாக கண்டிக்கத்தக்கது. 16 வயது நிரம்பிய சிறுவனே இந்தச் சம்பவத்தில் காயமடைந்துள்ளார். அத்துடன் பஸ் உதவியாளர் ஒருவரும் காயமடைந்ததாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு பொறுப்பதிகாரி விசாரணைகள் மேற்கொண்டுள்ளார். இதன் முடிவு உடன் கூறமுடியாது. இதற்கான நடவடிக்கைகளை தாம் வேகமாக எடுக்கவுள்ளோம் எனவும் தெரிவித்த அவர், பொலிஸ் பொறுப்பதிகாரிகளுடனும், படைத் தளபதிகளுடனும் இந்தவிடயம் தொடர்பாக கலந்துரையாடவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

## அரசியல் பிணக்...

இருவரும் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் எனவும், அவ்வாறு இணக்கப்பாடு ஏற்படாதுவிட்டால் - பொதுத் தேர்தல் ஒன்றை நோக்கிச் செல்ல வேண்டிய தேவை ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான இணக்கத்தை ஏற்படுத்துவதற்காக மனோ தித்தவெல மற்றும் மலிக் சமரவிக்ரம குழுவினரும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

## மன்னார்க் கடலில்...

கடலுக்குள் வீழ்ந்துள்ளனர். உடனடியாகவே இரு இளைஞர்கள் மீட்கப்பட்டபோதும், மற்றையவரை மீட்க முடியாமல் போனதுடன், இவரைப் பற்றிய மேலதிக தகவல்கள் எவையும் இதுவரை தெரியவில்லை.(201)

## தற்போதைய....

இந்தச் சந்திப்பில் நாட்டில் தற்போதைய அரசியல் நிலவரம், புலிகள் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு மற்றும் சமாதான முயற்சிகள் குறித்த சர்வதேசம் உள்ளிட்ட பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டதில் பங்கேற்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் விடுதலைப் புலிகளும் ஒருமித்து ஒரே நிலையில் இருப்பதெனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

# ஆவணங்களைப்பறித்ததாக பொலிஸார் மீது முறைப்பாடு!

சத்திரச் சந்திப்பகுதியில் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த சமயம் - தனது ஆவணங்களைப் பொலிஸார் பறித்துள்ளதாகத் தெரிவித்து, யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று மதியம் சந்திரச் சந்திப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே இவ்வாறு தனது அடையாள அட்டை மற்றும் ஆவணங்களைப் பறிமுதல் செய்துள்ளதாக பெ.சுந்தரலிங்கம் (வயது 38) என்பவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து விசாரணைகளை உடன் மேற்கொள்ளவுள்ளதாக யாழ். மனித உரிமைகள் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ப-111)

## ஜோர்ஜ் பெர்னாண்டசுடன்...

அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸும், இலங்கை இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவும் இராணுவ ரீதியான ஒத்துழைப்புக்கள் மற்றும் பிராந்தியப் பாதுகாப்பு விடயங்கள் குறித்து விரிவாக விவாதித்ததாக தெரிவித்தார்.

சர்வதேச பயங்கரவாதம் குறித்து இரு தரப்பினரும் இந்தச் சந்திப்பில் விரிவாக விவாதித்தாகவும் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர்,

பல்வேறு விடயங்கள் குறித்தும் இரு நாட்டு பாதுகாப்புத் துறைகளும் ஒத்துழைப்பது குறித்து காட்டப்படும் ஆர்வம் குறித்தும் பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிவித்தார்.

இராணுவத் தளபதி பலகல்ல நேற்று முன்தினம் ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்னிலங்கை அதிகார இழுபறி குறித்து...

தெரிவித்தார்.

அங்கு அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு,

கேள்வி: சமாதான நடவடிக்கைகள் இழுத்தடிக்கப்பட்டு வருவதுபோன்ற ஒரு சூழ்நிலை நிலவுகிறது. இந்த நிலை தொடருமாக இருந்தால், எந்தவிதமான நடவடிக்கைகள் எடுப்பதாகத் தீர்மானித்துள்ளீர்கள்?

பதில்: நீங்கள் குறிப்பிட்டது போன்று தென்னிலங்கையில் அதிகார இழுபறிப்போட்டி ஆரம்பமாகி சமாதான முன்னெடுப்புக்கள் இழுத்தடிப்புச் செய்யப்பட்டது என்பது உண்மை. இந்தநிலை தொடருகின்ற சூழ்நிலையில் எங்களுடைய தலைமை சரியான, தீர்க்கமான முடிவுகளை எடுக்கும். அப்போது - அந்த முடிவுகள் வெளிப்படையாக அறிவிக்கப்படுமென நினைக்கிறேன்.

கேள்வி: விடுதலைப் புலிகள் சண்டையைத் தொடங்கக்கூடாது என சர்வதேச நாடுகள் அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக வெளியே ஓர் அபிப்பிராயம் நிலவுகிறது. இது சரியான கருத்தா?

பதில்: நாங்கள் யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தம் இல்லாமை அழிவுகள் இல்லாமல் அமைதியான முறையில் பேசி ஒரு தீர்வைக் காண்பதற்கு அர்ப்பணிப்போடும், ஆர்வத்தோடும் இருக்கிறோம் என, சர்வதேச நாடுகள் உட்பட எல்லோருக்கும் எமது தேசியத்தலைவர் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

ஆகவே - நீங்கள் குறிப்பிட்டது போன்று, சர்வதேச சமூகத்தின் ஆர்வமும் விருப்பமும் அதுவாக இருக்கிறது.. எனவே - சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தத்தைப் பிரயோகிப்பது தவிர்க்க முடியாது இருக்கின்றதென நான் நினைக்கிறேன்.

கேள்வி: நோர்வே சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் இன்னும் வரவில்லை. போர்நிறுத்த உடன்பாடு சட்டவிரோதமானது என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். இந்தநிலையில், போர்நிறுத்த உடன்பாடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமா?

பதில்: சந்திரிகா அம்மையாரிடம் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும். ஏனெனில், சந்திரிகா அம்மையார் அவ்வப்போது ஒவ்வொரு விதமான அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கிறார். பல்வேறுவிதமான கருத்துக்கள் வருகின்றது. இதில், எது உண்மை எது பொய் என்று எங்களால் சொல்லமுடியாது. ஆனால் யுத்த நிறுத்த உடன்பாடு தொடர்கிறது.

சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளை தலைவர் சந்திக்கும்போது, யுத்த நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து பேண விரும்புவதாகவும், அதனை செம்மையாக நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பதாகவும் கூறியிருக்கிறார்.

கேள்வி: விடுதலைப் புலிகள் கையளித்துள்ள இடைக்கால நிர்வாக சபை வரைபு நாட்டுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியதாக இருந்தது. அதனால்தான், அமைச்சுக்களைப் பொறுப்பேற்றேன் என்று கூறிய ஜனாதிபதி சந்திரிகா, அந்த இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக புலிகளுடன் பேசுவதற்கும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கும் தயாராக இருக்கிறேன் என்று கூறிவருகிறார். இந்த முரண்பாடுகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: என்னைப் பொறுத்தவரையில் சந்திரிகா அம்மையாருடைய கருத்துக்கள் தொடர்பாக நாங்கள் கருதத்துக்கூறுவது என்பது மிகக் கடினமானது என நினைக்கிறேன். ஆகவே, சந்தர்ப்ப சூழ்நிலை கனியும்போது அதற்கான பதிலை நாங்கள் சொல்லுவோம் எனத் தெரிவித்தார்

## படையினரின் துப்பாக்கிச்...

இச்சம்பவத்தை அடுத்து அங்கு விரைந்து வந்த பொலிஸார்,சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினர் மூவரையும் கைதுசெய்தனர். அதற்கிடையில் அவ்விடத்துக்கு வந்த பொதுமக்கள் துப்பாக்கியால் சுட்ட படையினரை பொலிஸ் வாகனத்திலிருந்து கீழே இறக்கி தாக்க முயற்சித்தனர்.

இதனையடுத்து ஆகாயத்தை நோக்கி சுட்டபோது மக்கள் கலைந்து சென்றனர்.சம்பவ இடத்திலே பெருமளவான இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். வைத்தியசாலைப் பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. சம்பவத்தை நேரில் கண்ட தனியார் பஸ்நடத்துனரான க.சண்முகம் என்பவரும் பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவரும், பொலிஸார், கண்காணிப்புக்குழு, மனித உரிமை ஆணைக்குழு ஆகியோருக்கு நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விளக்கினர்.

கண்காணிப்புக்குழுவினரும்,மனித உரிமைக்குழுவினரும் சம்பவ இடத்திற்கு வந்து நிலமைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சி செய்தனர். பெருமளவான பொலிஸார் கண்ணீர்புகைக்குண்டுகளை ஏவத் தயாரான நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து தப்பிச்சென்ற பத்திரிகை விற்பனைசெய்த இளைஞன் பாதுகாப்புத் தேடி விடுதலைப்புலிகளின் நல்லூர் கோட்ட அரசியற்துறை அலுவலகத்தில் தஞ்சமடைந்தார்.

பத்திரிகை விற்பனையாளரான கந்தர்மடத்தைச் சேர்ந்த செல்வராசா விஜயகுமார் (வயது-16) தற்பொழுது யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

நேற்றிரவு 7 மணியளவில் யாழ்.போதனாவைத்தியசாலைக்கு வந்த தமிழ்தேசியகூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தாக்குதலுக்கு இலக்கானவர்களை பார்வையிட்டதுடன் யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு சென்று அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த படையினர் மற்றும் சாட்சியமளித்தவரான க.சண்முகம் ஆகியோரையும் பார்வையிட்டுள்ளார்.

அவர் பொலிஸாரிடம் சாட்சியமளிக்க வந்தவரை தடுப்புக்காவலில் வைத்திருப்பது தவறான செயல் எனச்சுட்டிக்காட்டியுள்ளார். (ப.ச.111)


## நேர்முகத்தேர்வு

நிதித்துறையின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களின் பணிநிலை வேண்டுகைகளுக்கான நேர்முகத்தேர்வு

நேர்முகத்தேர்வு இடம்:
வருவாய்ப்பகுதிச் செயலகம் யாழ்ப்பாணம்.
[கைலாயபிள்ளையார் கோயில் அருகாமை]

காலம் :
11.12.2003 வியாழன் காலை 10மணி
12.12.2003 வெள்ளி காலை 10மணி

மேலதிக விரிப்பு 07,08 ஆம் நாள் ஈழநாடு நாளிதழில்

குறிப்பு : நேர்முகத்தேர்வின் முன்னர் விண்ணப்பதாரிகள் அனைவருக்குமான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு நடைபெறும். நிதித்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்


## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1571 திகதி: 09.12.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| V | 1 | 9 | 2 | 9 | 3 | 2 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.